www.tamilarangam.net



# சஞ்சீவி

மலர் - 20

Chanchive 20-Udgave



DE COLOMBES
92600 ASNIERES SUR - SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சஞ்சீவி

மலர் - 20
ஆகஸ்ட் - செப் / 1992

அட்டைப்பட விளக்கம்:
தேசம் அழுகின்றது....

| பக்கம் | உள்ளடக்கம்: |
|---|---|
| 03 | நோக்கு |
| 07 | தமிழ் குழந்தை...... |
| 15 | 3 நாள் பயிற்சி..... |
| 18 | கவிதை |
| 19 | சிறுகதை |
| 27 | சிறுகதைப்போட்டி |
| 28 | கு.எழுத்துப்போட்டி |
| 31 | கலந்துரையாடற் - கட்டுரைகள் |
| 45 | கட்டிடக்காட்டுக்குள்... |
| 47 | படித்ததும் கேட்டதும் |
| 48 | கவிதை |
| 49 | புலம்பெயர்........ |

சஞ்சீவியின் தொடர்புகளுக்கு: Chanchive
PostBox-1205
7500-Holstebro.D.K

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோக்கு

இன்று பரவலாக தாயகத்தினை விட்டு வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்களின் பெயரால் பலநல்லகாரியங்களும்,அதேவேளைபுலம்பெயர்ந்தோரின் பெயர்பலகைகளைப்பாவித்து பல கெட்டவிடயங்களும் நடைபெறுகின்றது.இந்தவகையில் டென்மார்க்கின் நிலமைகளை அவதானிக்கும்போது,அண்மையில் நடைபெற்ற ஆசிரியர்பயிற்சிக் கருத்தரங்கானது தமிழ்க்குழந்தைகளின் ஒருபாடத்திட்டத்திற்கான வேலைமுறையாக அமைந்ததுடன்,அதேவேளை ஆசிரியர்களுக்கும்,பெற்றோர்களுக்கும் நம்பிக்கையூட்டியுள்ளதென்றால் மிகையாகாது.

இந்த நடவடிக்கையானது இங்கு புலம்பெயர்ந்த தமிழர்களின் 2வது தலைமுறைக்கான பொதுநோக்கத்தின் வெளிப்பாடாகும்.இத்தகைய நடவடிக்கையினை தமிழ்-டனிஸ் நட்புறவுச்சங்கங்களின்"கூட்டமைப்பு" முன்னின்று ஆரம்பித்தும்,செயற்படுத்தியும் வருகின்றது.இந்த செயற்பாடானது பிற ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டாகவும்-மாதிரி பாடத்திட்டத்திற்கான உதவியாகவும் அமையலாம். தமிழ்-டனிஸ் நட்புறவுச்சங்கங்களின் கூட்டமைப்பானது தமிழ்மொழிக்கான புதியபாடத்திட்டத்தினை அமைப்பதற்காக "கல்வித்திட்டக்குழு" வினை அமைத்ததுடன் கல்வித்திட்டக்குழுவானது சுயமாக செயற்பட்டும் வருகின்றது.இந்த கல்வித்திட்டக்குழுவின் செயற்பாடுகளில் ஒன்றாக அண்மையில் நடந்த ஆசிரியர் பயிற்சிக்கருத்தரங்கை குறிப்பிடவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மேலும் இந்த பாடத்திட்டக்குழுவினரையும்,அவர்களது கடும் உழைப்பினையும் மனமாரப்பாராட்டப்பட வேண்டியதுடன் பொதுவாக வெளிநாடுகளின் சூழ்நிலையில் நேரம்,பிரயாணம்,போக்குவரத்துச்செலவீனம்(சிலர் நகராட்சிமன்றம், கூட்டமைப்பிடமிருந்து உதவிகள் பெற்றிருந்தாலும்கூட)என இப்படிப்பட்ட பல சிரமங்களுக்கு மத்தியிலும் இவர்களின் உழைப்பினை பெற்றோர்களும் ஆசிரியர்களும் கவனத்திற்கொண்டு இவர்களுக்கு உதவுவதன்மூலமே 2வது சந்ததியானஎங்கள் குழந்தைகளுக்கு தமிழ்மொழியினை இங்குள்ள சூழல்,சமுகஅமைப்பிற்கே ற்ப கற்பிக்க வழிவகுக்கும்.

இதன் வெளிப்பாடாகவே பல ஆசிரியைகள் இந்த 3நாள் பயிற்சிக்கருத்தரங்கிற்கு சிறுகுழந்தைகள், துணைவரையும் பிரிந்து தனியேவந்து கலந்துகொண்டது, இந்தமுன்னோடித்திட்டத்திற்கு பெரிதும் உதவியாக அமைந்தது.

மேலும் தமிழ்பேசுவோரின் பிரச்சனைகளென நாடாளுமன்றம்முதல் தனி அரசியற் தலைவர்கள்வரை,மக்கள்தொடர்புசாதனங்கள் மூலமும் பேசப்பட்ட விடையங்களானது,இங்குவாழும் முழு அகதிகள்,வெளிநாட்டாரையும் பெரிதும் பாதித்துள்ளதுடன் இன்னும் பாதிக்கக்கூடிய பல ஆலோசனைகளையும் முன்வைத்தமையுமாகும்.அண்மையில் கல்விஅமைச்சினால் நகராட்சிமன்றங்களுக்கென அனுப்பிவைக்கப்பட்ட ஆலோசனையாவது:

> "வெளிநாட்டுக்குழந்தைகளுக்கான தாய்மொழியினைக் கற்பிப்பதற்கு,நகராட்சிமன்றம் விரும்பும் பு ட்சத்தில்மட்டுமேநிதியினைப்பயன்படுத்தலாம்"என்பதாகும்.

www.tamilarangam.net

இந்த ஆலோசனையானது வெளிநாட்டோருக்கும்,அகதிகளுக்கு எதிராகவும் வளர்ந்துவரும் எதிர்ப்புக்கள் மத்தியில் எத்தகைய விளைவுகளை உண்டுபணணும் என்பதனை நாம் விளக்கவேண்டியதில்லை.அதிலஸ்டவசமாகஇந்த ஆலோசனையானது அமுலுக்குவராது பாிசிலனையிலுள்ளது.

ஆகவே இப்படியான பல இடர்பாடுகளுக்கு மத்தியில் இக்கல்வித்திட்டக்குழுவானது செயற்பட்டுவருகின்றது. இப்படியான சில நடைமுறைச்சிக்கல்கள் காரணமாக இக்கல்வித்திட்டக்குழுவில் பலர் சேர்க்கப்படாது விடுபட்டிருக்கலாம்.அண்மையில் சில நணபர்கள் சேர்க்கப்பட்டதுபோல,இன்னும் பலதுறைசார்ந்தோரையும் (உளவியல்,தத்துவவியல்,போன்றவை)பாடத்திட்டக்குழுவானது இணைத்துச்செயற்படவேண்டும். ஏனெனில் இது குழந்தைகளின் எதிர்காலம் சம்பந்தப்பட்ட விடையம்.இந்தவிடையமானது எமது விருப்பு,வெறுப்புக்கு உட்பட்ட விடையமல்ல.இந்த நடவடிக்கையானது பொதுப்பிரச்சனையாகும்.இதில் பலதுறை சார்ந்தோரதுகருத்துக்களும்உள்ளடக்கப்படுதல்வேணடும்.

ஐரோப்பியநாடுகளின் மத்தியில் முன்மாதிரியாக அமைந்த இந்நடவடிக்கையினை "கூட்டமைப்பானது" நடைமுறைப்படுத்த முன்வந்ததுபோல் நல்லெண்ணம் கொண்ட பிறதுறைசார்ந்த தமிழர்களிடம் கருத்துக்களைக்கேட்பதுடன் அவர்கள் விரும்பும் பட்சத்தில் இணைந்து வேலைசெய்வதன்மூலமாகவே ஓர் ஆரோக்கியமான பாடத்திட்டத்தினை அமைக்க வழிவகுக்கும். நாம் இவ்வாறு கூறுவதன்மூலம் பாரியவேலைத்திட்டத்தினை தனியாக சுமந்துகொணடிருக்கும் பாடத்திட்டக்குழுவினரை குறைகூறவோ,அவர்களது நடவடிக்கைகளில் பிழைபிடிக்கவோ நாம் முன்வரவில்லை.விடுபட்ட இடைவெளியையும் வேலைப்பழுவையும் சமப்படுத்தவே இத்தகைய கருத்தினைக்கூறுகின்றோம்.(டென்மார்க்கில் பல துறை சார்ந்த தமிழர்கள் வசிப்பது குறிப்பிடத்தக்கது)

சஞ்சீவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதேவேளை பாடத்திட்டக்குழுவானது தனது செயற்பாடுகளில் உடன்வெளிப்படுத்தவேண்டிய விடையங்களை சஞ்சீவிக்கு அனுப்பிவைத்தால்,சஞ்சீவியானது எதிர்வரும் வெளியீடுகளில் வெளியிட்டு உதவ காத்திருக்கிறது.இன்னுமொருவிடையம் பெற்றோர்கள் குழந்தைகளுக்கு தமிழ்மொழியினை கற்பிப்பதில் அக்கறையில்லையென குற்றச்சாட்டுக்களை ஆசிரியப்பயிற்சிக்கருத்தரங்கின்போது சில ஆசிரியர்கள் முன்வைத்தனர். இந்தவிடையம் தொடர்பாக கல்விகற்றவர்கள்இந்தவிடையத்தில் அக்கறையீனமாக இருப்பது அவர்களது குறைபாடுதான்.நாட்டில் தமது கல்வியினை இடையில் நிறுத்திக்கொண்ட பெற்றோர்களை இங்குவிமர்சிப்பது எந்தஅளவுக்கு பொருத்தமாகும்.இத்தகைய விடையங்களுக்காக கல்வித்திட்டக்குழுவானது சகலஆசிரியர்களுடனும் தொடர்புகொண்டு தமிழ்மககள் வாழும் பகுதிகளில் சிறுகருத்தரங்குகளை நடாத்துவதன்மூலம் இப்பிரச்சனைக்கு தீர்வினைக்காண முடியும்.அதாவது குறைந்தபட்ச பெற்றோர்களிடம் இவ்விடையமானது சென்றடைவதன்மூலம் செய்திகள் பரவலாக்கப்பட்டு இறுதியில் கலவித்திட்டக்குழுவின் செயற்பாடானது சகல தமிழ் பெற்றோர்களுக்கும் சென்றடையும் என்பதில் சந்தேகமில்லை.
இத்தகைய நடவடிக்கைகளுக்கு சஞ்சீவியும் தன்னால் முடிந்த பங்களிப்பினை வழங்கும்.

-சஞ்சீவி-


டென்மார்க்கிலிருந்து வெளிவரும்
இதழ்களிலிருந்து....

**SANGAMAM**
**DANSK-TAMILSK-VENSKABSFORENING**
**POST BOX-313,DK.7400-HERNING.**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் குழந்தைகளுக்கான புதிய பாடத்திட்ட பயிற்சிக் கருத்தரங்கு. (02/03.05.1992)

1984 ம் ஆண்டுமுதல் பல தமிழர்கள் டென்மார்க்கிற்கும் மற்றய நாடுகளுக்கும் ஈழப்பிரச்சனையின் காரணமாக எமது தாயகத்தினைவிட்டு புலம்பெயரத் தொடங்கினர்.காலவோட்டத்தில் இந்த புலம்பெயர்வானது பல்வேறுபட்ட பிரச்சனைகளினையாவருக்கும் ஏற்படுத்தியிருந்தது.ஆரம்பத்தில் எவருமேபுலம்பெயர்வால் குறிப்பிடக்கூடிய பல தாக்கங்கள் ஏற்படும் எனநினைத்திராவிடினும்,காலப்போக்கில்நடமுறைச்சிக்கல்கள்,வதிவிடஉரிமை,கலாச்சாரவேறுபாடுகள்,பொருளாதாரம்,அரசியல்,மதம்,பிரஜாஉரிமை பண்பாடுகள்,கல்வி, வேலை,இருப்பிடம்,குடும்பஒன்றிணைப்பு,குடும்பப்பிரிவு என எத்தனையோ வகையான பிரச்சனைகள்பலவகையிலும்குழப்பியதோடு பலரை சிந்திக்கவுந்தூண்டியது.

இந்தவகையில் ஆரம்பத்திலிருந்தே சிலர்,இந்நாட்டுமக்கள்-அரசஉதவியுடன் (நாடு பூராக காலவித்தியாசத்தில்)பலவகையானசங்கங்கள்,நிறுவனங்களினைநிறுவத்தொடங்கினர்.கூடுதலானஅளவில்புலம்பெயர்ந்தோர்பற்றியும்,பிரச்சனைகள்பற்றியும்மக்கள் தொடர்புசாதனங்களும்,மக்களும் பரவலாகசெய்திகள் வெளியிடுவதுடன் பேசவும்தொடங்கினர்.இப்படிப்பட்ட பிரச்சனைகளுக்கு ஓரளவாவதுகுறைந்தபட்ச தீர்வாவது காணவேணடும்(எல்லாப்பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண்பதுசுலபமற்றது)என்றவகையிலும்,இந்நாட்டுமக்களுக்கும்,புலம்பெயர்ந்தோருக்கும் அவர்களின் சிந்தனைக்கும்,புரிந்துணர்வுகட்குமாக பலசெயற்திட்டங்களினைஇச்சங்கங்களும்,நிறுவனங்களும் தனித்தனியே ஏற்படுத்தத்தவறவில்லை.

சஞ்சீவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிலஆண்டுகளுக்கு முன்பு இச்சங்கங்களில் பல கூட்டுறவின் முக்கியம் கருதி (சங்கங்களின் ஒன்றியம்) ஓர் ஒன்றியத்தினை ஏற்படுத்தியிருந்தன. இவ்வொன்றியமானது பலசெயற்திட்டங்களை பரீட்சார்த்தமாக முன்வைத்ததோடு, புலம்பெயர்ந்த மக்களின், குறிப்பாக தமிழ்க்குழந்தைகளின் எதிர்காலம்பற்றியும், முக்கியமாக கல்விபற்றிய விடையமாக செயற்திட்டம் ஒன்றினை முன்வைத்ததுடன் செயற்படுத்தியும் வருகின்றது.

இந்த செயற்திட்டங்களின் வகையில் தமிழ்சிறார்களுக்குதமிழ்க்கல்வியும் ,தமிழர்கலாச்சாரமும் முக்கியமாகபோதிக்கப்படவேண்டுமெனவும், தற்போது தமிழ்ப்பிள்ளைகள் கல்வியறிவு, வயதுவித்தியாசம் அற்றநிலையில் (உதாரணம்:7 தொடக்கம் 17வயதுவரையிலான சிறார்கள் ஒரேவகுப்பறையில் சேர்ந்து படித்தல்)தமிழைக்கற்றுவருவதனால் ஏற்பட்டுள்ள பலதரப்பட்டபிரச்சனைகளுக்காகவும், இச்சிறார்கள் டெனிஸ்மொழியினையும், டெனிஸ்பாடத்திட்டத்தினையும் ஓரளவாவதும்-கூடியவரையிலும் புரிந்து படித்து வருவதுடன், தமிழ்மொழியினை இலங்கை, இந்தியபாடத்திட்டத்திற்கு அமைய படிப்பதில்-படிப்பிப்பதில் சிறார்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்படும் சிக்கல்களினையும் பயிற்றப்படாத ஆசிரியர்கள் பலர், சிறார்களுக்குகற்பிப்பதினால் ஏற்படும் சிக்கல்களினையும் தீர்ப்பதற்குமாக பாடத்திட்டம் ஒன்று தேவையானது.

இந்தப்பாடத்திட்டம் சம்பந்தமாக, சஞ்சீவி மலர்களிலும், சிறுவர்மலர்கள் மூலமும் முன்வைத்தமையும் எழுதிவருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஒன்றியமானது புதியதமிழ்பாடத்திட்டத்-தினை உருவாக்குவதற்காக ஓர் குழுவினை அமைத்ததுடன் பாடத்திட்டம், தமிழ்கல்விசார்பாககலந்துரையாடல், போதனை, கருத்தரங்குகளினையும் நடாத்தி வருவதுடன், பாடத்திட்டக்குழுவானது சுயமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செயற்பட்டும் வருகின்றது.

பாடத்திட்டக்குழு,தமிழ்கல்வி கற்பிக்கும்ஆசிரியர்கள் கலந்துகொண்ட இரண்டுநாள்(02/03.05.92) பயிற்சிக்கருத்தரங்கில் சஞ்சீவியும் கலந்துகொண்டது.

02.05.92 சனி காலை 9.00மணிக்கு யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தத்துவவியல்விரிவுரையாளர் திரு.க.ஆதவன் அவர்களின் விரிவுரை,விளக்கங்களுடன் பயிற்சிக்கருத்தரங்கு ஆரம்பமானது.

தமிழ்க்கல்வியின்கட்டாயம்பற்றியும்,கலாச்சாரம்பற்றியவிளக்கங்களுடனும்,யாவரது கருத்துப்பரிமாறலாகவும் அமைந்தது.

திரு.க.ஆதவன் அவர்கள் சிறுவர் கல்வி பற்றிய விரிவுரையில் 1.மொழி2.கலாச்சாரம் 3.பொதுவானது என மூன்றுவகையாகப்பிரித்துஅவைபற்றிவிரிவுரை வழங்கினார்.

நாம்விஞ்ஞானயுகத்தில்வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.மனிதன் தோன்றியபின்பேமொழிதோன்றியது. ›கல்தோன்றிமண்தோன்றாக்காலத்துமுன்தோன்றிய மூத்தகுடி தமிழ்‹என்பன போன்றஇன்னும்எத்தனையோ புளுகுகளை வளர்ந்து வரும் குழந்தைகளுக்கு திணித்து அவர்களது எதிர்காலத்தினை பாழடிப்பது மிகவும் தவறு.எவரும்அண்டப்புளுகுகளைகுழந்தைகளுக்கு திணித்தல் கூடாது.இல்லாத ஒன்றை குழந்தை மனதில் பதியவைத்து அக்குழந்தைக்குதிணித்தல் கூடாது.

தமிழ்மொழியினைகுழந்தைகளுக்குசொல்லிக்கொடுக்கும்போதுகுழந்தையின்கொள்ளளவுபேணப்படுதல் வேண்டும்.சிறுபிள்ளையின் பார்வையானது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விரிந்துபட்டது.அந்தப்பிள்ளையின்தரம்கணிக்கப்பட்டும் அவர்களது தரத்திற்கேற்ப ஆசிரியர்கள் இறங்கிப் போகுதல் வேண்டுமெனவும்,தமிழ்மொழிபரந்தபல கருத்துக்களைக்கொண்டசொற்கூட்டமாகும்.தமிழில் ஒவ்வொரு எழுத்துக்களும் வித்தியாசமான கருத்து க்களைமாற்றக்கூடியது.மொழியைப்பொறுத்தவரை உச்சாிப்பு முக்கியமானது.வல்லினம்,மெல்லினம், இடையினம் இவற்றை நன்கு புரிந்து படிப்பித்தல்வே ண்டுமெனவும் கூறினார்.

விரிவுரையின்போது சிலர்தமதுகருத்துக்களை யும் ,கேள்விகளையும் எழுப்பிபதில்கள்பெற்றுக்கொ ண்டதோடு சிலர் தமது பாடநேர அனுபவங்களையும் கூறினர்.

கேள்வி:புதியமுறை தமிழ் எழுத்துக்கள் மூலம் தமிழை படிக்கும் குழந்தை பழையமுறை தமிழ்எழு த்திலமைந்த புத்தகத்தினைபடிக்கும்போதுஏற்படும் சிக்கலை எங்ஙனம் தீர்க்கலாம்?

பதில்:புதிய,பழைய எழுத்துக்களை விளங்கவைத்த பின்,புதியமுறையின் சுலபத்தினை விளங்கவைப்ப தோடு,புதியமுறையில் படிப்பிக்கலாம்.

கேள்வி:நேரம்போதாதுஉள்ளதால்குழந்தைகளுக்கு எந்த வகையில் படிப்பிக்கலாம்?

பதில்:குழந்தைகளுக்குஎந்தவகையிலும்திணித்தல் கூடாது.குழந்தையின் விருப்பத்திற்கேற்ப மனனம் கொடுக்கலாம்,ஆனால் பரீட்சை,திணிப்பு இருத்தல் கூடாது.
மற்றையோரின் கருத்துக்களும் பரிமாறப்பட்டன.

தொடர்ந்துவிரிவுரைநிகழ்த்தும்போது:குழந்தை யின் கல்வியில் ஆசிரியர்களைவிட பெற்றோரேமுக் கிய கவனம் எடுத்தல் வேண்டும் எனவும் குழந்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களுக்கான கல்வியல் ஓர் இலக்குவைத்துகல்விபுக ட்டப்படுவதுடன்-சஞ்சீவி போன்ற வெளியீடுகள் இதுபற்றி விரிவாக எழுதவேண்டும்.பெற்றோர்கள்பற் றிய குறைபாடுகளை விமர்சிப்பதைவிட — அவர்களது குறைபாடுகளை கவனத்தில் எடுத்து அதற்காகவும் ஆசிரியர்கள் வேலைசெய்யவேண்டும்.

இங்குவாழும்கூடுதலானகுழந்தைகள்பாட்டிமார் பாட்டன்மாரை இழந்து வந்துள்ளனர்.இந்த பாட்டி,பாட்டன்மாரால் குழந்தைகளுக்கு கிடைக்கவேண்டிய தமிழ்கலை,நாட்டார்பாடல்கள் பற்றிய காதுவழிக்கல்விச்செல்வத்தினை நிச்சயமாக இழந்துள்ளனர்.இதனால் இங்கு வாழும் தமிழ்குழந்தைகள் மத்தியில் இதன் பாதிப்பும் கூடுதலாக உள்ளது என்றார்.

தொடர்ந்து ஆதவன் அவர்கள் கூறுகையில் :இங்கு வாழும் பெற்றோர்களில் பெரும்பாலானோர் வீட்டில்சினிமாபார்ப்பதுகூடுதலானவிடையம்,சினிமாக்களைப்பொறுத்தவரையில் (மற்றவிடையங்கள்போலவும்)நல்லது,கெட்டது இருப்பதுடன்பலதமிழ்சினிமா படங்கள் மிகவும் தரம்குறைந்தன.குழந்தைகள்சினிமாப்படம் பார்ப்பதனை தடுப்பதுடன்,பெற்றோர்கள் படத்தினைப்பார்த்து,அந்தப்படம்தரமானதாகஇருந்து குழந்தைகள்மனதை சீரழிக்காதபடம் எனும்போது மட்டும்,குறிப்பிட்டபடத்தினை குழந்தைகள் பார்க்க அனுமதிக்கலாம்.என்றும் கூறினார்.

கேள்வி:ஒரு குழந்தைக்குவாசிப்பு,எழுத்துஎன்பனஎவ்வகையில்வகுத்துகற்றுக்கொள்ளவேண்டும்?

பதில்:குழந்தைகளுக்குஆரம்பத்திலிருந்து(புரிந்துகொள்ளும் காலம்)பாட்டு,கதை,படம்வரைதல், வர்ணம்தீட்டுதல்,எழுத்து,வாசிப்பு என்றவகையில் வகுத்து கொடுத்தல் வேணடும்.

இந்த விடையங்களின்பின்பு உளவியல் பற்றியும் குழந்தைகளுக்கு ஏற்படும் உளவியற்தாக்கங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றியும் அளவானவிளக்கங்களுடன் உளவியலாளர்கள் சிலர் பற்றியும்,அவர்கள் குழந்தைகள்பற்றி நடாத்திய ஆய்வுகள்பற்றியும் கூறினார்

ஒருகுழந்தை/மாணவன் எந்தவிடையத்தில்கூடியகவனம்செலுத்துகின்றானோ,அந்தநேரத்தில் ஆசிரியர் அதேவிடையம் சார்பாக விளக்கம்கொடுப்பது, அல்லது புகுத்திவிடுதல் வேண்டும் என்பதாகும். குழந்தைகளின் கேள்விகளுக்கு சரியானபதில்கொடுக்கப்படவேண்டும்.தெரியாததை தெரியாது என்றே குழந்தையிடம் கூறவேண்டும்,மாறாககுழந்தைகளுக்குபொய்களைச்சொல்லுவதும்,பேய்,பூதம்,உம்மாண்டி என்றவகையான பயங்களினை ஊட்டுவதையும்முற்றாகத் தவிர்க்கவேண்டும் எனவும் கூறினார்.

இத்துடன் மகரிஷியின் ஆள்தியானம் பற்றியும் கூறினார்.

அடுத்து சிறார்களுக்கு படமூலம் விளக்கங்களினை கூடியஅளவு கொடுத்தல் நன்று என்றும்,படங்களில் சிவப்பு,மஞ்சள்,பச்சை நிறங்கள் முக்கியமாக பயன்படுத்தப்படவேண்டும்.சிவப்புநிறமானது குழந்தைகளை மிகவும் கவரும் நிறமாகும்.இப்படியான நிறங்களையே குழந்தைகள் நன்குவிரும்புவர் என்றும் சில உதாரணங்கள்கூறி விளக்கினார்.

கலாச்சாரம்பற்றிக்கூறும்போது,ஏங்கிள்ஸ் தேசியஇனம்பற்றி கூறிய வரைவிலக்கணமானது:குறிக்கப்பட்டமக்கள்,குறிக்கப்பட்டமொழி,பிரதேசம்,பொருளாதாரம் கலாச்சாரம் என்பன இருத்தல் வேண்டும் என்றார்.

காலச்சாரம் என்னும்போது இதில் மதம் முக்கிய பங்கு வகிக்கின்றது.எமதுமக்களுடன் சைவமதம் பிணைந்திருக்கின்றது.வேதங்களை அடிப்படையாகக் கொண்டது.வைதீகசமயங்கள்.வேதங்களிலிருந்து உபநிடதங்கள் எழுதப்பட்டன.5ம்நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களின் ஆய்வின்படி சைவம் புதுப்பிக்கப்பட்டது.இந்த அடிப்படையான விடையங்கள் யாவும் சிறார்களுக்கு கட்டாயம் தகவலாக சகலமதம் சார்ந்தோருக்கும் படிப்பித்தல் வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏனெனில் சைவமே தமிழை இலக்கிய மொழியாக் கொண்டது.இதுதவிர தமிழர்களின் நாளாந்தவாழ்க்கையானது கோவில்மணிச்சத்தத்துடன் ஆரம்பித்தும்,கோவில்களைஅண்டியே இவர்களது கலாச்சாரவிழுமியங்களும் அமைகிறது.சமயம் என்பது வேறு,சமயம்பற்றிப் படித்தல் எனபதுவேறுவிடயமாகும் என்றும் கூறினார்

சிறுவர்களுக்கான கிராமியரீதியான பாடல்கள், என்னும் எத்தனையோ பலர் பாடியுள்ள குழந்தைப்பாடல்களை தெரிந்து எடுத்து ஒலிஇளையில்(கசற்) அழகாகப்பாடி பதிவுசெய்து குழந்தைகளுக்கு கொடுக்கலாம்.

இசை,கலை பற்றிய பயிற்சிகள் கொடுக்கலாம். இந்த விடையதகதில் சங்கீதம் பாடமுடியாதோரும்,பரதம் ஆடமுடியாதோரும் இவ்விடையங்கள்பற்றி பாடாமல் ஆடாமல் படவிளக்கங்களுடன் படிப்பிக்கலாம்.

முக்கியமாக ஈழத்துக்கவிஞர்கள் எழுதிய குழந்தைகளுக்கான கவிதைகள்-பாடல்களினைப்படிப்பித்தல் நன்று.

யாழ்ப்பாணத்து கலாச்சாரமுறையினை இங்கும் தொடர் தலென்பது தவிர்க்கப்படவேண்டும்.முக்கியமாக குழந்தைகளுக்கு கல்வி வழிபாட்டினை ஏற்படுத்தவே கூடாது.

ஆசிரியர்கள் மிகவும் பொறுமையுடன் மாணவரை வழிநடாத்தவேண்டும்.முக்கியகாரணமாக இங்குவாழ்வோருக்கு வேலைப்பழு-இரண்டுவிதமான கலாச்சாரத்தாக்கம் என்னும் பல விடையங்களின் தாக்கங்கள் இருந்தவண்ணமேயிருக்கும் .எப்போதும் ஆசிரியர்கள் மாணவச்சிறார்களினை தயவுடன் வழிநடத்தவேண்டுமெனவும் கூறினார்.

**Vicki wurts:**இவர் டென்மார்ககில் உள்ள **AAhus** பகுதியில் வெளிநாட்டவருக்கான தாய்மொழியினை பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கான விரிவுரையாளர். 02.05.1992 அன்று பயிற்சிக்கருத்தரங்கில் வழங்கிய விரிவுரையின் சுருக்கம்.

ஏஞ்சீவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுமார் 200 வருடங்களுக்குமுன் அன்று டென்மார்க்கை ஆண்ட அரசனின் வேண்டுகோளுக்கிணங்கி உருளை க்கிழங்கு விவசாயம் செய்வதற்காக இவரது மூதாதை யோர் யெர்மனியிலிருந்து இங்குவந்தனராம்.இவர்கள் ஏழு தலைமுறைகாலமாக யெர்மன் மொழியிலேயே பைபிளைப்படித்துவந்தார்களாம்.இவர்கள்டனிஸ்பிர சைகளாகஅங்கீகரிக்கப்பட்டும்,ஏழுதலைமுறையாக இன்றுவரையும் தமது கலாச்சாரத்தினை பேணிவரு கின்றதாகவும் கூறினார். மேலும் அவர் கூறும்போது டென்மார்க் சனநாயகத்தை பேணுகின்ற நாடு.இங்கு எ ல்லாமக்களுக்கும் சுதந்திரமிருக்கின்றது.எனவே வே றுநாட்டு வேறுமதத்தை சார்ந்த ஒருவருக்கு குளிப்பதி ற்கூட (முஸ்லீம்மதத்தினர்)அவரது சுதந்திரம் பேணப் படவேண்டுமெனவும் கூறினார்.

அகதிமுகாம்களில காலத்தைக்கழித்த 13வயது க்குழந்தைகளில் பலர் அங்கு 2 வருடம் பாடசாலை சென்றவர்கள்.இங்குவந்தபின்பு தாய்மொழியினைக் கற்றுக்கொள்வதிலுள்ள சிரமங்கள் பற்றி கவனிக்கப் படவேண்டுமெனவும் கூறினார்.

வெளிநாட்டுக்குழந்தைகள் பலர் சகமாணவரின் பிறந்தநாள்விழா,கல்விச்சுற்லுலாக்களில் கலந்துகொ ள்ளாதுபோவதால் சகசிறார்களின் நட்பு,கல்விமுறை களில் கூடியபங்கம் ஏற்படுகின்றது என்றும் கூறினார்.

03.05.1992 அன்று இந்நாட்டின் நீண்டகால கல்வி முறைகள் ,மாற்றங்கள் பற்றியும்,அரசியல்பற்றியும்,சிறா ர்கள்பற்றியும்,உற்பத்திகள் தொழிற்சாலைகள்பற்றியும் பொதுவான விரிவுரைகள் நடந்தன.

அன்பான வாசகர்களே !

உங்களிடமிருந்து ஆக்கங்களும் விமர்சனங் களும் வரவேற்கப்படுகின்றன.




-சஞ்சீவி-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 3நாள் பயிற்சிக் கருத்தரங்கும் அதன் பெறுபேறுகளும்



சஞ்சீவி, பாடத்திட்டக்குழுவிலுள்ள ஒருவரைச் சந்தித்து அவருடன் உரையாடியதிலிருந்து................

பாடத்திட்டம் ஒன்றினை டென்மார்க்கில் வாழும்தமிழ் சிறார்களுக்காக,அமைப்பதுபற்றி யும் அதன் ஒரு முன் வழியீடாக டனிஸ்/தமிழ் நட்புறவுச்சங்கத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்ட பயிற்சித்திட்டம் பற்றிய இந்த மூன்றுநாட்களில் :

தமிழ்மொழிப்பாடத்திட்டம் ஒன்றினை அமைப்பதான இப்பாரியவேலைத்திட்டத்திற்கு இம்மூன்றுநாள் முடிவுகள் ஒன்றும் பெரிதாக பயன்தரவில்லை,ஆயினும்தமிழ்ப்பாடசாலைகளுடன்நேரடித்தொடர்புகளைகொண்டிருக்கின்ற பெரும்பாலான ஆசிரியர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்ததும்,கலந்துரையாடியமையும்,அதன் வழி பாடசாலைகளிலுள்ள பிரச்சனைகள்/அவற்றினை எங்ஙனம்தீர்க்கலாம் என்றும் சகலரும் இப்பிரச்சனையைப் புரிந்துகொள்ள இச்சந்திப்பு பெரிதும் உதவியது எனபதே எனது கருத்தாகும்.

பாடத்திட்டம் ஒன்றினை வடிவமைப்பதற்கு முன்பாக,அதுதொடர்பான ஓர் முன்னிலை ஆய்வுகளுக்கும் இச்சந்திப்பு உதவியது. ஆனாலும்

இம்மூன்றுநாள் நிகழ்ச்சிநிரலில் பயிற்சித்திட்டத்தினரால் வழங்கப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1.தமிழ்மொழிக்கல்வியும் அதன்கலாச்சாரமும்

2.டெனிஸ்மொழிக் கல்விப்பாரம்பரியம்

3.டெனிஸ் கல்விக்கூடங்களில் தமிழ்சிறார்கள்

ஆகிய மூவகை நிலைப்பட்ட அறிவுரீதியான விடயங்கள் போதிக்கப்பட்டன.இம்மூன்றுவிடையங்களும் "பாடத்திட்டம்" ஒன்றுக்கான அடிப்படைத்தேவைகளை முற்றாக நிவர்த்தி செய்யாவிடினும் ஒரு முன்னிலை அறிவைப்பெற்றுக்கொண்டேன் என்பது உண்மைதான்.இம்மூன்றுநாள் நிகழ்ச்சியினூடாக பாடத்திட்டம் அமைப்பதில் பாரிய முன்னேற்றம் ஒன்றினை நான் அடையாவிட்டாலும் இவைதொடர்பான சில அறிவியல் உள்ளடக்கங்கள்என்னைச் சிந்திக்கத்தூண்டியது என்பதுவே ஒரு பெரிய வெற்றியாகும்.

டென்மார்க்கில் சிந்திச்சிதறி தொடர்புகளற்றுக் கிடந்த தமிழ்ஆசிரியர்களை ஒன்றுதிரட்டியது, ஒரு பாரியபணி.அதைச்செயற்படுத்தியதோடல்லாமல் டென்மார்க் அரச கல்வி நிறுவனங்களின் உதவியும் பெற்று,பாடசாலைகள் இயங்கும் நகரசபைகள் நிதிப்பொறுப்பினை ஏற்றிருந்தாலும் ,சில நகரசபைகள் நிதி உதவி செய்ய மறுத்திருந்தும் ,அந்நிதியினை சங்கம் தனது பொறுப்பில் ஏற்று இப்பயிற்சிநெறிக்காக ஆசிரியர்களுக்கு உதவின.இந்தவகையில் இப்பணி மிகவும் பாராட்டத்தக்க பணியாகும்.

இந்தவிடையத்தில் ஆசிரியர்களின் ஆர்வம் போதாது என்பதே எனது கருத்தாகும். பலர் இந்தவிடையத்தில் ஆர்வமாக இருந்தாலும் சிலரது அக்கறையீனங்களும்,வசதிகளை தவறாகப்பயன்படுத்தியமையும் சம்பந்தப்பட்டவர்களுக்கு மனச்சோர்வையும்,பின்னடைவையும் தரவல்லதென்பதே எனது இக்குற்றச்சாட்டுக்குக்காரணமாகும்.

சஞ்சீவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனாலும் ஆசிரியர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண் ஆசிரியைகளாக இருந்தும் தங்கிநின்று பயிற்சிகளை முடித்தமையும், ஊக்கம்காட்டியமையும் மனதுக்கு உற்சாகம் தருவனவாகும். ஆசிரியர்கள் பாடத்திட்டம் அமைப்பதில் ஆர்வம் காட்டுவதைவிடுத்து அதில் அவசரப்படுகின்ற தன்மையானது அமையப்போகும் பாடத்திட்டத்தில் குறைபாடுகள் வரக்காரணமாகிவிடுமெனக் கருதுகின்றேன்.

உரைநிகழ்த்தியவர்களது கருத்துக்கள் எங்ஙனம் எம்மைத்திருப்திப்படுத்தியது எனும்போது இதில் எனது தனிப்பட்ட அபிப்பிராயத்தினையே சொல்லமுடியும் அங்கு எடுக்கப்பட்ட பெரும்பாலானவிடையங்கள், எனக்கு ஏற்கனவே தெரிந்திருந்தவிடையங்களே என்பதும், புதுமையாக எதையும் கற்றுக்கொள்ளமுடியவில்லை எனக்கருதுகின்றேன். காரணம் பாடத்திட்டம் அமைத்தல் தொடர்பாக நான்ஏற்கனவே பல நூல்களைப்படித்ததும், இவைதொடர்பாக பல நிபுணர்களைக்கண்டு தகவல்சேகரித்தமையுமாக இருக்கலாம். ஆனால் அவர்களது விரிவுரைகள் என்னைத்திருப்திப்படுத்தாவிடினும், ஊக்கப்படுத்தியது என்பது உண்மையே.

---

வாசகர்கள் கவனத்திற்கு!

சஞ்சீவியின் (பதிப்பு, அஞ்சல், காரியாலயம்) அத்தியாவசிய செலவுகள் அதிகரித்துள்ளமையினால் சஞ்சீவி ஒன்றின்விலை 15 குரோணாக கூட்டப்பட்டுள்ளது, என்பதனை உங்கள் கவனத்திற்கு தருகின்றோம்.

சஞ்சீவி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காதல் ஜனநாயகம்...

வானத்தைக்காண
நிலவு வரவில்லை
மண்டலம் இருண்டது.

பயிரைக்காண
மழை வரவில்லை
பூமி வறண்டது

கடலைக்காண
நதி வரவில்லை
மீனும் நண்டும் நலிந்தன

நிலவும் மழையும் நதியும்
அவளென்றால்
வானும் பயிரும் மீனும்
அவனென்றோ?

விழிகள் காதலிக்க
மனங்கள் பேதலிப்பதா?
இதுவும் ஒரு ஜனநாயகம்
மானுடத்திற்கு ஓட்டு ஜனநாயகம்போல்
இது ஒரு காதல் ஜனநாயகம்.

சாந்தி
**Tallose**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காகிதப்பூக்கள் என்றும் மணப்பதில்லை

கே.பி.லிங்கம்



வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. மழைத்தூறல் இன்னும் நின்றுவிடவில்லை. மாசிமாதக்குளிருடன் கலந்த காற்று சோர்வான வேகத்தோடு வீசிக்கொண்டிருந்தது. நான்குநாட்கள் தொடர்ச்சியான மழையினால் நிலம் நன்கு குடித்து இழகிவிட்டது. தேங்கியிருந்த — தண்ணீரெல்லாம் அந்த வயல் வெளியிலிருந்து மெல்ல மெல்ல நகரத் தொடங்கிவிட்டது.

ஆனால் இன்னும் தூறல் நிற்கவில்லை. பங்குனிக்குளிர் எல்லோரையும் இறுக்கி துயில்கொள்ளச் செய்துவிட்டது.

அதிகாலை ஐயோ.....ஐயோ.................

"என்ரைபிள்ளை"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ற குளறு சத்தம் படுத்திருந்தவர்களை எல்லாம் ஒருகணம் அதிரவைத்தது.சிலர் பயத்தால் ஓடத்தொடங்கிவிட்டனர்.சிலர் பதுங்குகுளிக்குள் பதுங்கிவிட்டனர்.ஆனால் வெடிச்சத்தங்கள் இல்லை ஏன்?இந்த அழுகுரல் யாருக்கும் புரியவில்லை.சிந்திக்கக்கூடிய மனநிலையிலும் யாரும் இருக்கவில்லை.

மீண்டும்,மீண்டும் குளறுசத்தங்கள் கூடிவிட்டன. சிலருக்கு மனதில் தெம்பு வந்துவிட்டது.குளறு சத்தம் வந்ததிசைக்கு சிலர் ஓடிக்கொண்டிருந்தனர்.கிட்டக் கிட்ட வர வர அழுகுரல்கள் கூடிக்கொண்டேயிருந்தது. தங்கம்மாவீட்டுக்கிணற்றைச்சுற்றி பலர் அழுதுகொண்டிருந்தார்கள்.ஓடிவந்தவர்களில் ஒருவன் தன் சாரத்தை கழற்றி எறிந்துவிட்டு கிணற்றுக்குள் குதித்துவிட்டான் அவன் தண்ணீருக்குள் மிதந்தவளின் உடலை கைகளால் பற்றிஇழுத்துக்கொண்டான்."அண்ணே கயிற்றை விடுங்கோ பெட்டை செத்துப்போச்சுது"பிணம் மேலே வந்துவிட்டது.அழுகுரல்கள் வானத்தைப்பிளந்தது. தங்கம்மா மகளின் உடலை கட்டிப்பிடித்து,தலையில் டித்து ஒப்பாரிவைக்கத் தொடங்கிவிட்டாள்.

கமலா கிணற்றுக்குள் வீழ்ந்து இறந்துவிட்ட செய்தி ஊரெங்கும் பரவிவிட்டது."பெட்டை ராத்திரி வேளையோடை விழுந்துபோனாள்.ஒருத்தரும் கவனிக்கேல்லை.பெட்டை தன்ரை உடுப்பு சிதைஞ்சுபோடுமெண்டெல்லாம் வடிவா இழுத்துக்கட்டிக் கொண்டுதான் விழுந்திருக்கிறாள்.வேளைக்கு திட்டம்போட்டுத்தான் இப்படி செய்திருக்கிறாள்.பாவம் வாழாவெட்டியா,துடிச்சு பதைச்சு,சீவன்போயிட்டுது.இனி என்ன செய்யிறது" விதி ஆரைவிட்டது.பெட்டையின்ர உடம்பும் தண்ணியுக்கே கிடந்து பொருமிப்போச்சுது.கனநேரம் வைச்சிருக்கேலாதென்றுதன்கவலையை சொல்லிக் கொண்டுஒப்பாரி வைக்கத்தொடங்கிவிட்டாள் தங்கம்ஆத்தை அழுகுரல்களில் அவளின் குரல் தனித்துவமானது. செத்தவீட்டில் தன் கவலையை சொல்லி அழத்தொடங்கிவிட்டாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மகள் இறந்தநேரம் தொடங்கி கந்தையாவால் கதைக் கமுடியவில்லை.பூவரசம்மரத்தின்கீழ் தேம்பித்தேம் பி அழுதுகொண்டிருந்தார்.அழுது அழுது கண்ணீரெல்லாம் வற்றிவிட்டது.இருந்தாலும் அவரால் அழாமலும் இருக்கமுடியவில்லை. யாரோஒருவனின் வரவுக்காக ஏங்கிக்கொண்டிருந்தார்.கொஞ்சநேரம் கழித்து ஒருவன் அவரிடம் போய் காதினுள் ஏதோ சொல்லிமுடிப்பதற்குள் ஐயோ என்ர ராசாக்கள்....... என்று அலறியபடி நிலத்தில் மீண்டும் புரண்டு புரண்டு அழத்தொடங்கிவிட்டார்.உவர்ந்துபோனநிலம் அவரை நன்கு அணைத்துக்கொண்டது.

ஒருகணம் எல்லோரின் அழுகுரல்களும் நின்றுவிட்டது.கந்தையாவின் அழுகுரல் தொடர்ந்துகொண்டேயிருந்தது.யாரும் அவருடைய அழுகையை நிற்பாட்ட துணியவில்லை.பக்கத்தேயிருந்த அவரின் தகப்பனாலும் மனம்பொறுக்கமுடியாமல் எழும்பி அவர் அருகே வந்துவிட்டார்.வந்தவர் நிலத்தில புரண்டு அழும் மகனை மிக வாஞ்சையோடு தலையைத்தடவிக்கொண்டே....

"டேய் தம்பி கந்தையா ஏனடா உடம்பை இப்பிடி போட்டு நாசமாக்கிறாய்?பெட்டைக்கு விதி தண்ணியிலே? இவள் இப்பிடி செய்வாள் எண்டு ஆர் மோனை நினைச்சது?எழும்பி அழாமல் கொஞ்சநேரம் நில்"
ஆக்கள் எல்லாம் வந்து போகுதுகள் நீ இப்பிடி இருந்தால் ஆரெல்லாம் செய்யிறது.மகனை கையிலே பிடித்து மிக இதமாக எழுப்பி விட்டு சற்று தள்ளிப்போய் கிழவன் அழத்தொடங்கிவிட்டார்.தன்மனதை சற்று திடப்படுத்திக் கொண்டு கந்தையா மீண்டும்அந்த இளைஞனிடம் சென்று ஏதோ கூறினார்.அவன் சற்று பொறுமையோடு "மாமா நான் ஜேமனிக்கு போன் எடுத்தனான் ஒருத்தரும் வேலையாலை வரவில்லையாம்,வந்ததும் சொல்லுவதாக மச்சானுடன்/



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கிற பொடியன் சொன்னான்."நான் எல்லாம் விப ரமாய்த்தான் சொன்னனான்.வசதியெண்டால் நாளை கரும் ஒருக்கால் கதைப்பன்."
நீங்கள் ஏன் மாமா வீணா அழுது சாகிறியள்.என்று அவரை சாந்தப்படுத்தத் தொடங்கிவிட்டான்.ஆனால் அவரோ தன்னைக் கட்டுப்படுத்த முடியாத நிலையிலே யே காணப்பட்டார்.
ஐயோ....ஐயோ...இவளுக்காகத்தானே நீங்கள் கலியா ணம் கட்டாமல் இருந்தனிங்கள்
இவ்வளவு நாளும் உழைச்சது யாருக்கு....?
எல் லாத்தையும் எறிஞ்சுபோட்டு போயிட்டாளே?
நான் என்ர பிள்ளையளுக்கு என்ன சொல்லப்போற ன்.....இவள் ஏன் இப்பிடி செய்யவேணும்,என்ரபிள்ளை க்கு என்னகுறை வைச்சனான்.என்ரை ஒருதேவடியா ளாலே என்ரபிள்ளை போச்சுது?
நான் என்னெண்டு இனி இருக்கப்போறன்....என்ரை அண்ணா...அண்ணா....
தமையனைக்கட்டிப்பிடித்துக்கொண்டார் கந்தையா.

கமலாவின் அந்தியேட்டியும் முடிந்துவிட்டது. ஜேர்மனியிலிருந்துமூன்று மகனிடமிருந்துகடிதங்களு ம் பணமும் வந்தன.மூத்தவன் தாயை நன்கு பேசி எழுதியிருந்தான்.மகளின் மரணம் அவரை நன்கு வாட்டியதோடுமுன்னைய நாட்களைவிட சற்றுஅதிகம ாகவும் குடிக்கத்தொடங்கிவிட்டார்.மகளின் மரணத்து க்கு தானே காரணம் என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டிருந்த தங்கம்மா கணவனை குடிக் கவேண்டாம் என்றுகூட தடுக்க சற்று தயக்கம் கொண் டாள்.

நீண்ட இடைவெளிக்கு பினனர் கலயாணத்த ரகர் கந்தப்பு அங்கே வந்துவிட்டார்.தங்கம்மா அவரை க்கண்டதும் ஒப்பாரிவைத்து மகளின் சாவை அவரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்கு தெரியப்படுத்தினாள். ஒப்பாரிவைத்து அழுத சத்தம் தூரத்தேவந்துகொண்டிருந்த கந்தையாவின் காதில் விழத்தொடங்கியது.புதியவர்கள் யாரோ தன்வீட்டிற்கு வந்துள்ளனரென்று மனதுக்குள் ஊகித்துக்கொண்டார்.உள்ளே வந்ததும் கதிரையில் கந்தப்பா இருப்பதைக்கண்டதும் அவரின் முகம் சற்று கோபத்திற்குள்ளானது.

அழுதுகொண்டிருந்த மனைவியை தலைமயிரில் பிடித்து தன்பலம் கொண்ட மட்டும் நான்கு,ஐந்துமுறைகள் மாறி மாறி அடித்துவிட்டார்.அவள் அதிர்ந்துவிட்டாள். வாயால் இரத்தம் வரத்தொடங்கியது.ஆனால் அவரால் கோபத்தை அடக்கமுடியவில்லை.வாய்திறந்து அழமுயற்சித்தாள்.ஆனால் அவளால் மீணடும் அழமுடியாத நிலைக்கு வந்துவிட்டாள்.
கோபத்தை அடக்கமுடியாதவராக கந்தப்பாவை நோக்கி சரமாரியாக பேசத்தொடங்கிவிட்டார்.

"என்ரமகளுக்கு எத்தினை இடத்திலே எஞ்சினியரையும் டொக்ரரையும் கலியாணம் பேசினனீ? எது சரி வந்தது....?
என்ரை பெண்டில் மூணடு பெடியங்களை வெளிநாட்டுக்கு அனுப்பிப்போட்டு மகளுக்கு பெரிய இடம்பார்த்தாள் .ஒண்டும் கிடைக்கயில"
என்ரபிள்ள சாகயிக்கைமுப்பத்திமூணடு வயசு.ஆறு ஏழு வருசமாய் கலியாணம் பேசத்தொடங்கி கடைசியிலே என்ர பெண்டிலின்ர எண்ணத்துக்கு ஒரு கூலிவேலை செய்யிற பொடியன்கூட சரிவரயில்லை

உத்தியோக மாப்பிள்ளை பார்க்க இவள் செத்தபெட்டையை எவ்வளவுக்கு படிப்பிச்சவள் எண்டு கேள் கந்தப்பு .
வெளிநாட்டிலே உளைச்சு காசு இருந்தாப்போல எங்களைத்தேடி ஆரும் பெண்கேட்டு வந்தவங்களோ? இவள் கொஞ்சகாசை வைச்சுக்கொண்டு இருந்தவீட்டையும் இடிச்சு பெருப்பிச்சு பொடியள் சாப்பிடாமல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

“நித்திரையில்லாமல் உளைச்ச காசெல்லாத்தையும் இந்த வீட்டுக்குள்ளே கொட்டிப்போட்டாள்.
நான் ஒரு ஆம்பிளை இருக்கிறன் எண்டு நினைச்சவளே....?எனக்குத்தெரியாமல் எத்தினைஇடத்திலே மாப்பிள்ளை கேட்டவள் தெரியுமா?
எவ்வளவ சீதணம் எண்டாலும் தாறன் எண்டு சொன்னளாம்”
“இவள் எவ்வளவு லட்சம் வைச்சிருக்கிறாள் எண்டு எனக்குத்தெரியாது.
என்ரை மூண்டுபொடியன்களும் ஜேர்மனியிலே என்னஉத்தியோகமே பாக்கிறாங்கள் .
எங்களின்ரை ஊரிலே சாரம்கட்டிக்கொண்டு வேலை செய்தவங்கள் அங்கே லோங்ஸ் போட்டுக்கொண்டு செய்யிறாங்கள்,அவ்வளவுதான் வித்தியாசம்.
அதுகள் அங்கே படுகிற கஸ்டம் இவளுக்குத்தெரியாது மூத்தவனுக்கு கலியாணம் முடிச்சு நான் பேரப்பிள்ளையைக் காணுறவயசிலே அவன் கஸ்டப்பட்டு உழைச்சு அனுப்ப இவள் பாவிக்கு கண்கடைதெரியாமல் நடக்கிறாள்.
என்ர அக்காவின்ர மகனை கலியாணம் செய்ய மூததவனுக்கு விருப்பம்,செத்தவளுக்கும் விருப்பம்.அந்தப்பொடியனை நான் செய்துபோடுவன் எண்டுதெரிஞ்சு இவள் அக்காவோடை தேவையில்லாமல் சண்டைபிடிச்சு என்னமாதிரி என்னைப்பிரிச்சுப்போட்டாள்-தெரியுமே!
அவன் பொடியன் நல்லா படிச்சவன்.இந்தப்பிரச்னையாலேதான் அக்காவும் செத்தவீட்டுக்கு வரயில்லை.
இதற்குமேலே பேசாமல் வாயடைத்துப்போனவருடைய கைகள் ஆத்திரம்தாங்காது மீண்டும் அவளது கன்னங்களை பதம்பார்த்துவிட்டது.
தேவையில்லாத சிக்கலுக்குள் தான் மாட்டிக்கொண்டதாக கந்தப்பா எண்ணிக்கொண்டார்.இனிமேல் இங்கே இருந்தால் பிழை என்று நினைத்துக்கொண்டு அவர் எழும்ப முற்பட்டார்.
கந்தப்பா அவசரப்படாதேயுங்கோ.....?

சஞ்சீவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ரமகள் ஏன் செத்தவளெண்டு தெரியுமே...........?
இவள் சொல்லியிருக்கமாட்டாள்.
பெட்டையும் பாத்தாள் இனிமேல் தனக்கு கலியாணம் கடைசிவரைக்கும் நடக்காது.நாங்கள் மாப்பிளைதேட அவளுக்கு ஐம்பதுக்கு மேலே வயது போயிடும்.
ஏன் எங்களுக்கு வீண்கஷ்சலை கொடுப்பான் எண்டு கிணத்துக்குள்ளே விழுந்து போச்சுது.
ஒண்டையும் அனுபவிக்காமல் துடிச்சுப்பதைச்சுப்போட்டுது........புண்ணியம் செய்தது.
மீண்டும் பேசமுடியாமல் வாயடைத்து கேவிக்கேவி அழத்தொடங்கிவிட்டார்.
மௌனமாகிவிட்டவரின்மனம் அமைதிகொள்ளவில்லை மனந்திறந்துதன்கவலையைமீண்டும்வெளிப்படுத்தினார்.
நான் என்ன உத்தியோகமே பாக்கிறன்.........?
இவள் என்னோடை முப்பத்தாறு முப்பதீதேழு வருஷமாய் இருந்துகொண்டு மகளுக்கு உத்தியோக மாப்பிள்ளை பாக்கிறாள் எண்டால் ............
இவளை என்ன செய்யுறது.
உத்தியோகம் பாராதவன் எல்லாம் குடும்பத்தை பார்க்கமாட்டாங்கள் எண்டுதான் இவள் நினைக்கிறாளாக்கும்.
இவளைப்போலே எத்தினைபேர்மக்களை வெளிநாட்டுக்கு அனுப்பிப்போட்டு உத்தியோகமாப்பிள்ளை தேடிக்கொணடிருக்கினம் எண்டு எனக்குத்தான் தெரியும். காகிதப்பூ ஒருநாளும் மணக்காது.இவளும் அப்படித்தான். இப்பிடி தராதரம்பார்த்து கலியாணம் செய்யிறதெண்டால் பெட்டையள் நாற்பது ஐம்பது வயதுவரைக்கும் இருக்கவேணும் அல்லது என்ரபெட்டையைப் போல இடையிலே போகவேணும்.இதுதான் நடக்கும் இப்ப ஊரெல்லாம் இப்பிடித்தான் நடக்குது.

இப்பிடி எத்தினை புதினங்கள் நடக்கப்போகுதோ தெரியாது."பாப்பம்"என்ரை செத்தபெட்டை வயதுதான் இவள் கண்ணம்மாவுக்கும்.அவளின்ரமகன் இப்ப சுவீசுக்குப் போயிட்டான்.

சஞ்சீவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இவள்மகளுக்கு இன்னும் கலியாணம் பேசிமுடிக்கை யிலே “இவள் ஊராக்கள் என்னசெய்யினம் எண்டு பாத்தாளே தவிர தான் என்ன செய்யவேணும் எண்டதை மறந்துபோனாள்.
அப்ப இவளை என்னசெய்யிறது.
கந்தையாவின் உதடு துடித்தது.
கைகளை உயர்த்த மீண்டும் தங்கம்மாவை தாக்கமுற் படும்போது கந்தப்பு தடுத்துவிட்டார். வாயக்குவந்தபடி பேசிக்கொண்டு அவர் வெளியே போய்விட்டார்.
கந்தப்பாவும் தப்பிப்போவதற்கு இதுதான் தரணம் என் று சற்று மனத்தயக்கத்தோடு வெளிக்கேற்றை திறந்து கொண்டு போய்விட்டார்.

இவர்களை அழுதபடியே அவள் பார்த்துக்கொண்டிரு ந்தாள்.

அவளது மனதுக்குள் இருக்கும் எண்ணங்கள் அழிய வில்லை.

அவள் தான் இப்போதும் அசையாத மலைமீது இருப்ப தாகத்தான் எண்ணிக்கொண்டாள்.

கவிஞன் சுதந்திரமானவன் என்று கூறக்கேட்கிறோம். சுதந்திரம் அல்லது விடுதலை என்றால் என்ன?பேரா சிரியர் அ.மார்க்ஸ் விளக்குகிறார்.
தன்னைச் சுற்றியுள்ள இயற்கை எவ்வளவுக் கெவ்வளவு மனிதாயமற்றிருக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு மனிதன் சுதந்திரமற்று இருக்கின்றான். எவ் வளவுக்கெவ்வளவு தன்னைச் சுற்றியுள்ள இயற்கையை அதாவது புறச்சூழலை (சமூகத்தை) மனிதாயப்படுத்துகின்றானோ அவ்வளவுககவ்வளவு அவன் சுதந்திரமடைகிறான். விடுதலையடைகிறான்.

சஞ்சீவி

www.tamilarangam.net

# சஞ்சீவியின் சிறுகதைப் போட்டி

## போட்டி பற்றிய விபரங்கள்

### சிறுகதை உள்ளடக்கம்

ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்களது:

1.வாழ்க்கைமுறைபற்றிய பிரச்சினைகள்

2.குழந்தைகள் எதிர்நோக்கும் பிரச்சினை

3.இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை

4.குடும்பங்கள் எதிர்நோக்கும்பிரச்சினைகள்

5.கலாச்சாரப் பாதிப்புக்கள்

இது ஒரு அறிமுகத்துக்காக கொடுக்கப்பட்ட விபரங்களே தவிர,வரையறைகள் அல்ல.

ஒரு எழுத்தாளன் ஒன்று முதல் மூன்று வரையிலான சிறுகதைகள் அனுப்பலாம். ஆனால் சிறந்தகதை எனத்தெரிவுசெய்யப்படும் ஒருகதை போட்டிக்கு எடுத்துக்கொள்ளப்படும்.மற்ற இரு சிறுகதைகளும் பிரசுரத்துக்கு எடுக்கப்படும்.

கதையின் உள்ளடக்கம் A-4வில் 5பக்கங்களில் அமைந்திருத்தல் நன்று.

ஏற்கனவே வேறுவெளியீடுகளில் வெளியான சிறுகதைகள்போட்டிக்குஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

பரிசில்கள் முதலாம்இடம்,இரண்டாம்இடம்,மூன்றாம்இடம் என்றஅடிப்படையில் முறையே1000,500,250 குறோன்கள் என்ற பரிசுத்தொகை வழங்கப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப்போட்டி

இல :17

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 | 3 | | 5 | 6 | 7 | 8 ம் |
| 9 | 10 | 11 | 12 ள் | | | 15 | 16 |
| 17 | 18 | 19 ம | | 21 | 22 | | 24 |
| | 26 | 27 | 28 | 29 வி | 30 | 31 | |
| 33 | 34 | | 36 | 37 | 38 ர | 39 | 40 |
| 41 டை | | | 44 | 45 | 46 | | 48 |
| 49 | 50 | | 52 | 53 | 54 | 55 | |
| 57 | 58 | 59 கை | | 61 | 62 | 63 | 64 |

சஞ்சீவியின் குறுக்கெழுத்து போட்டியாளர்களுக்கு!

குறுக்கெழுத்துப்போட்டி மூலம் ஓர் பலமான-விளக்கமான கருத்தினை உங்களுக்கு தரமுடியாதிருந்தும், பல வாசகர்களினது விருப்பங்களினாலும், பழையன கழித்து புதியன விரும்புவோர் மத்தியிலும், சஞ்சீவியின் 2வது கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட முடிவுகளின் மூலமாகவும் கு.எ.போட்டியின் வடிவ அமைப்பு மாற்றப்பட்டுள்ளது.

பதில்கள் கிடைக்வேண்டிய இறுதித்திகதி:20.09.1992

குறுக்கெழுத்துப்போட்டியின் பரிசில்களாக கவிதைத்தொகுப்பு,சிறுவர்களுக்கான நூல்கள்,பிறசஞ்சிகை இதழ்களில் ஒன்று என்ற வகையில் போட்டியில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இட- வலம்:

| இல: | கேள்விகள். |
|---|---|
| 1. | கதியற்ற அல்லது நாட்டுப்பிரச்சனைகாரண மாக இடம்பெயர்பவரை இப்படி அழைப்பர். |
| 5 | இது அடைக்கலம் என்பதின் மறுபெயர். |
| 9 | வேடனை இப்படியும் அழைப்பர். |
| 17 | மனதில் இது உள்ளவர் ,வாழ்வில் எப்போதும் உறுதி தளரார். |
| 21 | இது வந்தால் அந்தஇடத்தில் நெருப்பு இருக் கும் என்பார்கள். |
| 26 | இது தாவரங்களைப்பற்றி விவரிக்கும் அறிவி யற் கல்வித்துறையின் பெயராகும். |
| 33 | பருத்தி. இதற்கு இப்படியும் ஒரு பெயருண்டு. |
| 36 | வயிற்றினுள் இருக்கும் உணவு செமியாது தொல்லைதருதலை இப்படியும் கூறுவர். |
| 44 | பலதரப்பட்ட பிரச்சனைகளால்கூடியமக்க ளுக்கு உடல்,மனம் இவற்றில் இது ஏற்பட்டு ள்து. |
| 49 | ஆகாயத்தின் மறுபெயர்களில் ஒன்று. |
| 52 | தரைப்படை,கடற்படை,விமானப்படை,இவை மூன்றினையும் சேர்த்து இப்படியும் அழைப்பர். |
| 59 | ஏவலாளை இப்படியும் அழைப்பர். |
| 61 | பௌத்தம் இதனை இப்படியும் கூறுவர். |

மேல் - கீழ்:

| இல: | கேள்விகள். |
|---|---|
| 1 | ஒருவர் அதிகவேலைசெய்தால் இது வரும். |
| 2 | இவர் கபடம் நிறைந்தவர். |
| 3 | வெப்பத்தால் ஆவியாகக்கூடியதும், தனக் கென்ற நிலையான வடிவமற்ற இது குழம்பி யுள்ளது. |

www.tamilarangam.net

7 இது பல நாட்டின் அரசாட்சிகளையே கவிழ்த்துள்ளது.

21 புவி(பொருட்களை)தன்நோக்கி இழுக்கும் சக்தியே இது.

24 நான்கு வாரங்களை இது உள்ளடக்கியது.

33 கலப்பையின் கொழு எனப்படும் இப்பகுதியை இப்படி அழைப்பர்.

48 காற்றினை உடலினுள் இழுத்து அடக்கிவைத்திருத்தலே இது.

63 இலங்கை- இந்தியா நாடுகளில் சனநாயக உரிமைகளுக்கு இது விதிக்கப்பட்டுள்ளது.

## மௌனம் / மரணம்

-வளவன்-

கறணம்
தப்பினால்
மரணம்!
ஆ
னா
ல்
மௌனம்
அல்லது
மரணம்
எ
ன்
ப
து
மனச்சாட்சி
உள்ளவர்கள்
விதி
ஆயிற்று.......
எ
ம
து
தாயகத்தில்.

சஞ்சீவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னம் ஒரு பொழுது
அவர்களை நாம் அறியாதபோது
எம்மிடம் நிலம் இருந்தது,
அவர்கள் கையில் பைபிள்.....
இன்று எமது மண் அவர்களிடம்.
எமது மண்ணில் நாமே அடிமைகள்.

(பாலஸ்தீனக் கவிதை)

## சஞ்சீவியின் 2வது கலந்துரையாடல் பற்றி

——— ஆசிரியர் குழு ———

சஞ்சீவியின் இரண்டாவது கலந்துரையாடலானது 11/12.04.1992 ஆகிய இரண்டுதினங்கள் நடைபெற்றது.முதலாவது கலந்துரையாடலானதுஆசிரியர் குழுவினரால் தயாரிக்கப்பட்டநிகழ்ச்சிநிரலின் பிரகாரம் நடாத்தப்பட்டது.இதன் அடிப்படையில் அந்த ஒருநாள் நிகழ்ச்சியானது பல நடைமுறைச்சிக்கல்களை எங்களுக்குக் கொடுத்திருந்தது.இத்தகைய சிக்கல்களை தவிர்ப்பதற்காக இக்கலந்துரையாடல் இரண்டுநாட்கள் நடாத்தப்பட்டதுடன் நிகழ்ச்சிநிரல் தயாரிக்கும் பொறுப்பினை அங்கு கலந்துகொண்ட வாசகர்களிடமும் ஒப்படைக்கப்பட்டது.இந்தப் பொறுப்பினை வாசகர்களிடம் ஒப்படைக்கப்பட்ட காரணத்தினை கூறுவது முதன்மைப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சஞ்சீவியில் வெளியாகும் பெரும்பாலான ஆக்கங்கள் கடிதங்கள் யாவும் உருவாக்கி வெளியிடுவதாக சில சஞ்சீவி எதிர்ப்பாளர்கள்போலித்தனமான பிரச்சாரத்தினை மேற்கொண்டு வருவதை நாம் அறிந்தமையால் 2வது கலந்துரையாடலின்போது நிகழ்ச்சிநிரல்தயாரிப்பினைக்கூட வாசகர்களிடம் ஒப்படைத்திருந்தோம்.இந்தப்புதிய அறிமுகமானது வாசகர்கள் மத்தியில் ஒரு குழப்பத்தையும் சிறு சலசலப்பையும் ஏற்படுத்தியிருந்ததை எம்மால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.ஆரம்பத்தில் குழப்பமாக இருந்தாலும்இந்த 2நாள் கலந்துரையாடல் நல்ல ஆரோக்கியமானசூழ்நிலையை உருவாக்கியது.

கலந்துரையாடலில் பல விடையங்கள் கதைக்கப் பட்டிருந்தாலும் முக்கியமாக 3விடையங்கள் மையப்படுத்தப்பட்டிருந்தது.

1.வாசகர் கடிதங்கள்
2.சிறுவர்மலர்
3.வாசகர்வட்டம்

வாசகர் கடிதங்கள் பற்றிக்கதைக்கையில் கடைசியாக வந்த கடிதங்கள் நீண்டிருந்தது,வன்மைச்சொற்கள் பாவிக்கப்பட்டிருந்தது,பொய்யான தகவல்களும் கொடுக்கப்பட்டிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. குறிப்பாக "விடுதலைப்புலிகள்" பற்றிய அமுதாவின் கடிதம் பற்றியவிமர்சனம் முன்வைக்கப்பட்டது.அமுதாவின் கடிதத்தின் சாராம்சம் பற்றியஎந்தவிதமான கருத்துமுரண்பாடுகளையும் அங்குஒருவரும் எழுப்பவில்லை,அதில் குறிப்பிடப்படும் சமூகக் குறைபாடுகளாக கருதப்படும் சில அம்சங்களை ஆதரிப்பதாகவும் அதன்பொருட்டு கருத்தைக்கூறிய ஒரு வாசகர் உணர்ச்சி வசப்பட்டவராகவும் காணப்பட்டார்.அதேவேளை அவரது உணர்வையும் மதிக்கவேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது இருந்தும் சமூகக் குறைபாடுகளையும்,கடிதத்தில் உண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மையான சம்பவங்கள்தான் என்றும் சிலர் கூறினர் .

இறுதியில் எக்கருத்தினைக்கூறுவதாயினும் நாகரீகமான சொற்களிலும்,எதிர்க்கருத்து உடையவர்களைச் சீண்டாத வகையிலும் சொற்பிரயோகம் பிரயோகிக்கப்படவேண்டும் என்றகருத்து முன்வைக்கப்பட்டதுடன் முடிவாகவும் எடுக்கப்பட்டது.

அடுத்த விடையமாக சிறுவர் பற்றிய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது.இது சம்பந்தமான சஞ்வியினது கருத்துக்கள் இம்முறைநோக்கில் கொடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மூன்றாவதாக வாசகர் வட்டம் பற்றிய பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டது.இதுதொடர்பாக முதலாவது கலந்துரையாடலில் ஆசிரியர் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் இறுதியில் பொதுச்சபை என்ற அமைப்புமுறை பற்றி முன்வைக்கப்பட்டது.ஆனால் அக்கருத்து அன்றுள்ள சூழ்நிலையில் நிராகரிக்கப்பட்டதுடன் அன்றைய நிலையின் நேரம் போதாமை காரணமாகவும் மறுபாிசீலனை செய்யப்படாதது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த 2வது கலந்துரையாடலில் நாம் எதிர்பாராத விதமாக, கலந்துகொண்ட வாசகர்களே வாசகர்வட்டம் என்றகோரிக்கையினை முன்வைத்தபோது எமக்கு அமைப்பு வடிவம் பற்றிய குழப்பத்தை ஏற்படுத்தியது.

“வாசகர்வட்டம் அமைப்பதில் எமக்கு அக்கறையில்லை”அங்கு எழுந்ததை எம்மால் உடனடியாக உணரமுடியாமல் போய்விட்டது.ஆனால் வாசகர்வட்டம் அமைவதை சஞ்சீவி ஒருபோதும் எதிர்க்கவில்லை.

சஞ்சீவி வாசகர்கள் மத்தியிலே பல விடையங்களை ஆய்வுரீதியாகவும் தேடல் அடிப்படையிலும் விடையங்களை கற்றுக்கொள்வதற்காக“அஞ்சல் நூலகம்” என்ற ஒரு புதிய வழிமுறை ஒன்று எம்மால் முன்வைக்கப்பட்டதும்(அஞ்சல் மூலமாக புத்தகங்கள் பரிமாறிக்கொள்ளல் )இந்நடவடிக்கையானது கருத்துரீதியில் முதல் உடன்பாட்டை காண்பதற்கு உதவும் என்று நாம் கருதுகின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சஞ்சீவியின் எந்தமுடிவுகளும் முடிந்தமுடிவுகளாக வோ,பாிசீலனைக்கு அப்பாற்பட்ட விடையங்களாக வோ நாம் கருதவில்லை.தயக்கங்களையும்,சந்தேகங் களையும் ஒருபுறம் ஒதுக்கிவிட்டு பழக்கமற்றுப்போன தொரு சுதந்திரமான கருத்துப்பாிமாற்றத்தினை உரு வாக்குவதற்கு எல்லோரது கருத்துக்களும்,விமர்சன ங்களுமே வழிவகுக்கும் என்பதை உணர்ந்து தொலைத்ததை தேட அணிதிரள்வோம்!

-சஞ்சீவி-

*

சஞ்சீவியின் 2வது கலந்துரையாடலில் கலந்துகொ ண்ட 3 வாசகர்கள் தமது கருத்துக்களைத் தருகிறார்கள்:

கலந்துகொண்ட வாசகர்களே நிகழ்ச்சிநிரலை தயாாிக்க அனுமதிக்கப்பட்டது நல்ல ஆரம்பம்.ஆரம் பத்தில் பல விடையங்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து உரையாடப்பட்டாலும் நேரம்செல்ல ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடைபெற்றது.சென்றஆண்டுபோல சிறுகதை, கவிதை, அட்டைப்படம் .என்று பகுதிபகுதியாகபிாித்துஒருவர்விமர்சனம்செய்தபின்பு அதுபற்றிவிமர்சிக்காமல்,எல்லோரும் விமர்சிக்க விட டமை ஆக்கபூர்வமாகவும்,வித்தியாசமான பல கருத்துக்களை தருவதாகவும் இருந்தது.ஒருவாின் விமர்சனத்தின் பின்புகலந்துரையாடுவது ஒன்றில் விமர்சகாின்கருத்தைஆதாித்தலில் அல்லது எதிர்த்தலில் கூடியநேரம் செல்லும்.இது பலாின் வேறுபட்ட கருத்துக்களைஅறிய குறுகிய நேரத்தில் கஸ்டமாக இருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலந்துரையாடலின்போது கருத்துக்கள்சுதந்திரமான தாகவும் சஞ்சீவியின் வளர்ச்சியில் அக்கறையுடைய தாகவும் இருந்தது.இப்படியான கலந்துரையாடலின்பே ாது ஒருவர் மற்றவரை தனது பழைய அறிமுகத்தைக் கொண்டு அறிமுகம் செய்தல், அல்லது புகழுதல்கூடியவரையில் தவிர்ப்பது நல்லது.இது புதிதாக கருத்துச்சொல்ல வருபவர்களுக்கு ஒரு தய க்கத்தை அல்லது பயத்தைக் கொடுக்கும்.

கலந்துரையாடலின்போது ஒருவிடையத்தை எடு த்து உரையாடிக்கொண்டிருக்கும்போது மற்றயவிடைய ங்கள் பல சமயங்களில் இடையில் புகுந்துகொண்டது கவனிக்கக்கூடியதாக இருந்தது. இது,பொதுவான பல விடையங்கள் எல்லாவற்றுள்ளும் இருக்கும்போது இது தவிர்க்கமுடியாததாகும்.

வாசகர் கடிதம்,நோக்கு,போன்றவைபற்றி உரையாடிக்கொண்டிருக்கும்போது ஒரு சலசலப்பு ஏற் பட்டது.ஒரு வாசகரின் கடிதத்தை(சஞ்சீவியில் வெளி வந்த)கிட்டத்தட்ட ஒருவர் அதேபாணியில் விமர்சிக்கமுற்பட் டார்.அப்போது பலரிடம் இருந்து இப்படியான பொது இடங்களில் கதைப்பதற்கு "ஒருமுறை ஒரு மரியாதை வேண்டும்" என்று கேட்கப்பட்டது.இது உரையாடிக்கொண்டிருந்த விடையத்துக்கு ஒரு தீர்வா கவும் இருந்தது.அதாவது சஞ்சீவியில் வரும் படைப் புக்கள் இப்படியான "ஒரு மரியாதை ஒரு முறையைக் கொண்டு" இருக்கவேண்டும் என்பது.இது ஆசிரியர் குழுவாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.ஏதாவது ஒரு விடையத்தை எழுதும்போது அதேவிடையத்தில் சம கருத்துடையவர்களைமட்டும் திருப்தி செய்வதிலும் பார்க்க எதிர்க்கருத்துடையவர்களை சீண்டாமல்,கோ பப்படாமல், அக்கருத்தை தெளியவைப்பது நல்லபலனை கொடுக்கும் என்ற விடையமும் கருத்தி ல் கொள்ளப்பட்டது.

மண்வாசனைஅல்லது கடுமையான சொற்களின் பிரயோகம் பற்றி உரையாடும்போது ............................



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்படியான சொற்களை கூடியவரையில் தவிர்க்கக்கூடிய படைப்புக்கள் எல்லோருக்கும் புரியக்கூடியதாகவும்,நீண்டகால உயிரோட்டம் உள்ளவையாகவும் இருக்கும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.அங்கு படிக்கப்பட்ட 49ம் ஆணடுக் கவிதை ஒன்று இக்கருத்துக்கு ஆதரவாகவும்,உதாரணமாகவும் இருந்தது.

கவிஞரும்,நாடகநெறியாளரும்,இயற்றமிழ் போதனாசிரியரும்,அளவெட்டியை இருப்பிடமாகக்கொண்ட அமரர்/கவிஞர் செல்லையா.கதிரேசர்பிள்ளைஅவர்களின் பல கவிதைகளிலிருந்து ஒன்றே இங்கு வெளியிடப்பட்டுள்ளது.(இக்கவிதையானது சஞ்சீவியின்2வது கலந்துரையாடலின்போது கவிஞரின் மகனான திரு.க.ஆதவன் அவர்களால் படித்துக்காட்டப்பட்டது.இக்கவிதை கிராமஊழியன் என்ற பிரசுரத்தில் 1946-47களில் வெளிவந்தது.)

## அம்மாவுக்கு கடிதம்

அம்மாநீ அருமையுடன் பெற்று விட்டாய்
அன்புடனே கல்வியெல்லாம் ஊட்டிவைத்தாய்
சும்மாநான் இருப்பேனா உங்கள் நன்றிச்
சுமைதாங்கி என்னுடலம் சோரும்போது
தைமாதம் பணமனுப்பப் போதா தென்று
சாற்றிநீ எழுதிவிட்டாய் மறக்கவில்லை
இம்மாதம் அதுவுமில்லை,என்னசெய்வேன்
என்பணமாய் இங்கிருப்ப திருகண் ண்ரே!

முதல்தேதி யானவுடன் பணமுஞ் சேரும்
முழுத்தொகையும் எண்ணியபின் முழிப்பேன்அம்மா
பதில் என்ன கடனுக்கென் றெண்ணும் போதே
பணம் என்னைக் கைவிட்டுப் பறந்து போகும்
மதிப்பாகத் தான்இங்கு வாழுகின்றேன்
மகன் பணத்தை எதிர்பார்த்து நீயும் காப்பாய்
நதிமீதில் அமைந் திட்ட பாலம் போல
நானிங்கு வாழ்வதைநீ அறிகு வாயோ!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நண்பருடன் "ஹோட்டல்களை"நாடிச்சென்று
நாலைந்து ரூபாய்க்குக் கணக்கு வைக்க
பண்பாடித் தெருவீதி யெல்லாம் சுற்றிப்
படம்பார்த்துக் தனித்திரவில் வீடுசேர
கண்பார்க்கும் பொருட்கெல்லாம் காசுவீசக்
காதலெனும் கடும்சுழலிற் கடிது வீழ
உன்பாலன் நினைப்பானோ அம்மா உள்ளத்
துன்னுருவம் உன்துயரம் உறையும் போது.

குணமான நண்பரது குறைக்காய் ஐந்து
கூட்டமொன்றிற் குதர்க்கத்துக்காக ஐந்து
மணமான நண்பர்களுக் காகக் கொஞ்சம்
வருவிருந்தை மலர்த்துவதில் ரூபா கொஞ்சம்
கணநேரத் தவணைக்கு காசு கேட்கும்
கனமான தோழர்களுக் காகக் கொஞ்சம்
திணறாமல் என்செய்வேன் அம்மா இங்கு
செலவினங்கள் புதுப்புதிதாயச் சேரும்போது.

எத்தனையோ வழியாகப் பார்த்து விட்டேன்
என்கரத்திற் சிறிதேனும் சேர்க்க வென்று
சித்தியில்லை,செலவினங்கள் இந்த நாட்டு
மழைபோலத் திடீரென்று வந்து சேரும்
புத்தியில்லை,பிழைக்கவழி தெரியா தென்று
போக்காகச் சொல்லுவைநீ சொன்னாற்சொல்லு
சத்தியமாச் சொல்லுகின்றேன் உண்மைஅம்மா
சரியான தூக்கமின்றி தவிக்கின் றேனே.

---

வாசகர்வட்டம் ஒன்று அமைப்பதுபற்றி கலந்துரையாடப்பட்டு பின்பு அது ஒத்திவைக்கப்பட்டது.இதில் சஞ்சீவியின் ஆசிரியர்குழு ஆர்வம் காட்டாததும் கவனிக்கக்கூடியதாக இருந்தது.வாசகர்களிடையே தபால் மூலம் புத்தகங்களை பரிமாறும் முறை ஏற்பாடு செய்யப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படைப்பாளிகளை ஊக்குவிக்க போட்டிகளை நடத்த பரிசுத்தொகைகளை அளிக்க இருவர் முன்வந்தது முன்மாதிரியாகவும் சஞ்சீவியின் வளர்ச்சியில் கொண்டஆர்வத்தை காட்டுவதாகவும் இருந்தது.

கலந்துரையாடலின்போது சஞ்சீவியின் படைப்புக்களை மட்டுமன்றி வேறுபல அனுபவங்கள்,பொது விடையங்கள் பரிமாறப்பட்டது.கலந்துகொண்டவர்களிடையே ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தியது , மகிழ்ச்சிக்குரியது.

இப்படியான கலந்துரையாடலில் கலந்துகொள்ள ஆர்வம் உள்ளோரை ஒன்றுகூட்டி மிகவும் சிறப்பான கலந்துரையாடலை இரண்டாவதுமுறையாக ஒழுங்கு செய்த சஞ்சீவி ஆசிரியர் குழுவினரும்,அவர்களைச் சார்ந்தவர்களும் பாராட்டுக்குரியவர்கள்.இது வளர்ந்து தொடரவேண்டும்.

ரவி -

* *

சஞ்சீவி இரண்டாவது கலந்துரையாடல்-இரண்டுநாட்கள் நடைபெற்ற கலந்துரையாடல் சஞ்சீவி ஆசிரியர் குழுவினருக்கு மட்டுமன்றி சஞ்சீவி வாசகர் கூட்டத்திற்கும் பயன்பாடுகள் பலவற்றைக் கொடுத்ததொன்றாகும்.

1.சஞ்சீவியில் வாசகர் கடிதங்களின் முதன்மை பற்றி வெவ்வேறான கருத்துக்கள் பரிமாறப்பட்டன. அண்மைகளில் வெளிவந்த (சஞ்சீவியில்)வாசகர் கடிதங்கள் பற்றி சூடான ஆனால் பலமான ,அமைதியான ஆனால் ஆக்கபூர்வமான எண்ணவெளிச்சங்கள் எடுத்துக்காட்டப்பட்டன.எல்லோரும் தத்தம் நிலைகளில் இருந்து தமக்கே உரித்தான நடைகளில் "வெளிச்சம்" காட்டினாலும் கோடிட்டுக்காட்டிய விடையங்கள் அனைத்தும் அதிக மதிப்பெண் பெறவேண்டியவை.தவிர்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ப்படமுடியாதவை.சஞ்சீவி ஒரு மலரில் எத்தனை பக்கங்களை வாசகர் கடிதத்திற்கு ஒதுக்கலாம் என்பதை முன்கூட்டியே தீர்மானிக்கவேண்டும்.ஒரு பக்கச்சார்புடைய கருத்துக்கள் கொண்ட கடிதங்களை மட்டும் பிரசுரிக்காது இப்போது இடம்பெறுவதுபோல் பலபக்க கருத்துக்களுக்கும் மதிப்பளித்து பிரசுரிக்கவேண்டும். சஞ்சீவி ஆசியர்குழு கடிதத்தில் திருத்தவேலைகளை செய்யவேண்டுமெனின் குறிப்பிட வாசகனின் அனுமதியுடன் திருத்தங்கள செய்யலாம்.இது அவசியமானது.

2.சிறுவர்மலர் முயற்சி பற்றி பலராலும் விதைந்துரைக்கப்பட்டது.சிறுவர்மலரால் தங்கள் குழந்தைகளுக்கு மிகப்பயன் எனவும் கூறப்பட்டது. எதிர்மாறான கருத்துக்களும் பார்வைக்கு வைக்கப்படாமலில்லை. "எழுத்தே தொியாத வாசிக்கத்தெரியாத பிள்ளைகளிற்கு,சிறுவர்களிற்கு எந்தளவு சிறுவர்மலர் பயன்பெறும் டென்மார்க் முழுக்க ஒரு பொதுப்பாடத்திட்டத்தை தமிழ் படிக்கும் மாணவர்களிற்கு ஒரு குழு தயாரித்துக் கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையில் பாடம் கற்பிப்பதுஎமது குழந்தைகளின் கல்விக்கு அவசியம் எனவும் பிரஸ்தாபிக்கப்பட்டது.ஆனால் இக்கருத்திற்கும்,சிறுவர்மலர் சிலகாலம் நிறுத்தப்படவேண்டும் எனக்கூறுவதற்கும் என்ன சம்பந்தம்?என்னால் இக்கருத்தை ஏற்றுக்கொள்ளமுடியாமல் இருந்தது.

ஒரு பொதுப்பாடத்திட்டத்தை ஏற்படுத்துவதிலோ அதன் அடிப்படையில் தமிழ் கற்பிக்கவேண்டும் எனக்கூறுவதற்கோ எதிரான கருத்தைக்கொண்டவனல்ல நான்.ஆனால் சஞ்சீவி என்கிற இலக்கியச்சஞ்சிகை தன்னால் முடிந்த அளவு மேற்கொண்டு ஆக்கபூர்வமானதாகச்செய்கின்ற இப்பணியை இடைநிறுத்தவேண்டும் என்கிற வாதம் நியாயமானதல்ல.சஞ்சீவி சிறுவர் மலர் பலருக்கு உபயோகமானதாகவே இருக்கின்றது. அ,ஆ தெரியாத பிள்ளைகளுக்கு அதைத் தெரியவைக்க ஆர்வத்தை தூண்டுவது பெற்றோர்களே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"டெனிசில் தான் வீட்டில் கதைக்கவேண்டும் ,தமிழில் கதைக்கக்கூடாது "எனக்கட்டளையிடும் பெற்றோர்கள் வசிக்கும் டென்மார்க்கில் சஞ்சீவியின் சிறுவர்மலர் உருப்படியான ஒரு சமூகப்பணியே! சிறுவர்மலருக்கென ஒரு குழுவைத்தெரிந்து அதில் பெற்றோர்கள் இடம்பெறத்தக்கவாறு செய்தல் சிறுவர்களின் மனப்பாங்கைக அறிந்து அதற்கேற்றவாறு மலரை தயாரிக்க உதவலாம்.

3.சஞ்சீவியில் இடம்பெற்ற புதுக்கவிதைகள் விமர்சனம். கவிதை வரம்பைமீறி உடைத்துக்கொண்டு வெளிவந்ததனால் புதுக்கவிதைக்கு "ஒழுங்குமுறை" மை இல்லை என்கிற வாதமும் மரபைமீறி சிலவிடையங்களில் வரம்புமீறியதால்,புதுக்கவிதைக்கு ஒழுங்குமுறையே இல்லை என முடிவு செய்வது முறையாகாது என்பது இன்னொரு வாதமுமாகப் பேசப்பட்டது.புதுக்கவிதைப்பிரம்மாக்கள் வருகை அதிகரித்துள்ள இவ் வேளையில் புதுக்கவிதை பற்றிய விரிவான ஆய்வுக்கட்டுரைகள் சஞ்சீவியில் இடம்பெறவேண்டும்.அவை பல புதுக்கவிதையாளர்களிற்கு பயனுள்ளதாய் இருக்கும் என்பது என் கருத்து.சஞ்சீவியின் பக்கங்கள் அதிகரிக்கப்பட்டு பல புதுக்கவிதையாளர்களிற்கு தளம் அமைத்து வசந்தத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

4."குறுக்கெழுத்துப்போட்டி" வந்திருந்தோர் கருத்துப்படி இலகுவாக்கப்படவேண்டும்.குடைமாதிரி இல்லாமல் ஆரம்ப காலத்தில் சஞ்சீவயில் இடம்பெற்றது போல் பெட்டிவடிவில் அமைந்தால் நன்றாக இருக்கும்.

5.சிறுகதைகள்:மீரா,முல்லையூரான் நாதன், லாயா, கதைகள் பேசப்பட்டன.சூழலின் பிரதிபலிப்புக்கள் விமர்சனமாக்கப்பட்டது.நல்லசிறுகதைகளே சஞ்சீவியல் இடம்பெற்ற சிறுகதைகள்.தொடர்ந்து புதிய எழுத்தாளர்களுக்கு ஊக்கம் கொடுக்க உதவவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

6.நோக்கம்.:

"சஞ்சீவி தன்னை வெளிப்படுத்தவேண்டும்.

"இலங்கைப்பிரச்சினையில் சஞ்சீவியின் நிலைப்பாடு"

வெளிப்படையாய் உங்களை வெளிக்காட்டுங்கள்.

இப்படியான கருத்துக்கள் சஞ்சீவி ஆசிரியர் குழு முன் வைக்கப்பட்டது.ஆனால் சஞ்சீவி மலரை தொடர்ச்சியாக வாசிக்கின்ற மக்களிற்கு சஞ்சீவியின் "நோக்கு" தெரியாமலா இருக்கின்றது என்பது ஆச்சரியமே! உண்மைகளை நோக்கிய அவர்கள் நேசிப்பு தொடர்வதாகவே நான் நினைக்கின்றேன்."இதுதான்முடிவு" என யாரும் கூறமுடியாது."முடிவு" என்பது நிச்சயமானதே அல்ல. இவர்கள் கூறுகின்ற முடிவு நாளைக்குப் பிழையாகப்போய்,இவர்கள் தலைக்கு அளவான தொப்பிகள் போடப்பட்டால் "சஞ்சீவி"சிரஞ்சீவியாக இருக்க வாய்ப்பே இல்லை.பத்திரிகாதர்மத்தின்படி அணிசேராது தன்னிலைநின்று பார்வையைச் செலுத்துவதே இன்றைய சஞ்சீவியின் தலையாய பணியாக இருக்கவேண்டும், அதனையே சஞ்சீவி தொடர்வதாக நான் நினைக்கின்றேன்.

7. ஓவியக்கலைபற்றி விளக்கப்பட்டது.சமூகத்திற்கு நன்மைபயக்கக்கூடிய வகையில் நவீன ஓவியத்தையோ, சிறப்புஓவியங்களையோ எந்தளவுக்கு நகர்த்தலாம் என்பதுகருத்தாளப்பட்டது முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பம்சமாகும்.

மொத்ததிதில் முன்னேற்றமான ஒரு கலந்துரையாடல்.ஆசிரியர்குழு, மெத்தனமாய் மௌனத்தைக்கடைப்பிடிக்காமல் சிலஇடங்களில் வாயைத்திறக்கவேண்டும்.

-உதிசபாபதி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*** 18இதழ்கள்வரை வெளியிட்டு ,அக்கால இடைவெளிக்குள் ,சஞ்சீவி ஏற்படுத்திய தாக்கங்கள் அதன் வருங்கால வளர்ச்சிபற்றிய ஒரு மதிப்பீட்டுக்கென ஓர் இரண்டு நாள் "சஞ்சீவி கலந்துரையாடல் 2" என்ற நிகழ்வின்கீழ் சஞ்சீவியின் வாசகர்கள் அதன் ஆசிரியர்குழு முகதாவில் கூடியது.(11-12.04.92)

இக்கலந்துரையாடல் நிகழ்வானது சஞ்சீவியின் கலந்துரையாடல் 1ன் பிரதிபலன்கள்-அன்றேல் அதன் எதிர்விளைவுகளால் -ஒரு புதிய பரிமாணத்துடன் ஆரம்பமாகியது.ஒரு ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றலுக்கு வழிவகுத்திருந்தது.அதாவது கலந்துரையாடல் 1ல் வரையறுக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் சிலர் கருத்துக்களை சொல்லும் வாய்ப்பும் -அதன்பி ரகாரம் அது கலந்துரையாடற் தன்மைகளை இழந்து ஒரு சாதரண கருத்தரங்கு வடிவில் முடிந்துபோன அனுபவங்களை நிலைநிறுத்தி- இந்தமுறை கலந்துரையாடல்-2டானது கலந்துகொள்ளும் சகல வாசகர்களின் கருத்துக்களுக்குமாக ஒரு பரந்துபட்ட வடிவமாக முழு ஜனநாயக வடிவம் கொடுக்கப்பட்டு ,இரண்டு நாட்களும் கலந்துரையாடப்படவேண்டிய விடையங்களை (நிகழ்ச்சிநிரல்)தயாரிக்கும் பணியைக்கூட கலந்துகொண்டவர்களிடமே விடப்பட்டிருந்தது.

ஆனால் துரதிஸ்டவசமாக அப்புதிய பரந்த சூழலைப் பயன்படுத்துவது எவ்வாறு என்று தெரியாமலே பலரும் திண்டாடிக்கொண்டிருந்ததை கலந்துரையாடலின் ஆரம்ப ஒருசில மணித்தியாலங்களில் உணரமுடிந்தது.இதன்பின் வரையறுக்கப்பட்டதும்,கொடுக்கப்பட்ட ஒன்றுக்குள்ளேயே நின்றுபேசும் அல்லது உரையாடும் கறள்ப்பிடித்துப்போன தமிழ் வழக்கு தெரிந்தோ தெரியாமலோ ஆக்கப்படவேண்டிய தேவை அங்கிருந்தமையினால்,குறிப்பிட்ட சில தலையங்கங்களின்கீழ் கருத்துக்களைச் சொல்வதனூடாக கலந்துரையாடலை வளர்த்துச் செல்வதென ஆசிரியர் குழு எடுத்தமுடிவுக்கமைய சஞ்சீவியில் தொடர்ந்து இடம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெற்றுவரும்
கடிதங்கள்
நோக்கு
சிறுகதை/கவிதை
கட்டுரை
அமைப்பு/வடிவம்
எதிர்காலத்தேவைகள்
சிறுவர் மலர்

போன்று பெருநிரற்படுத்தி அவ்வப்பகுதிகள் பற்றி கலந்து கொண்டவர்கள் தத்தமது கருத்துக்களை முன் வைத்தனர். இவற்றுள் சஞ்சீவி மலர் 17/18ல் இடம்பெற்ற சில கடிதங்களும் அவற்றிற்கு ஆசிரியர் குழு அளித்த பதில்களும் பற்றி "கடிதங்கள்"என்ற தலைப்பின்கீழ் மிகவும் காரசாரமாகவும், கவனத்தோடும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது.
தனிமனித விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்டு நின்று கருத்துக்கள் விமர்சிக்கப்படலாம் என்றும் குழப்பங்களை ஏற்படுத்தக்கூடிய விவாதங்களை சஞ்சிகைக்குள் உட்படுத்துதல் தவறானது என்றும்,அவ்வாறு உட்படுத்தப்படினும் அவை நாகரீகமாக கையாளப்பட வேண்டுமென்பதும் அங்கு ஒலித்த விடையங்களாகும்.
இதுபோன்று ஆசிரியர் குழுவினால் முன்மொழியப்பட்டிருந்த ஏனைய விடையங்கள் பற்றியும் சகலரும் தத்தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.குறிப்பாக சிறுகதை,நோக்கு,கவிதை போன்ற அம்சங்களுக்கு கூடியநேரமெடுக்கப்பட்டு க் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.இதில் சிறுவர்மலர் பற்றிய விடையம் மிகவும் ஆர்வத்தோடும் அக்கறையோடும் விவாதிக்கப்பட்டது."சிறுவர்மலர்"வெளியீடு ஒன்றுக்கான மிக அத்தியாவசியத்தேவை ஒன்று உண்டு என்பதை சகலரும் ஏற்றுக்கொண்டிருந்தாலும்,சிறுவர்மலர் எவ்வாறு அமைதல் வேண்டும்?சிறுவர்மலர் ஒன்றுக்கான தேவையை முன்வைத்து அதன் ஆரம்ப ஆய்வுகள் செய்யப்படாத நிலையில் அதன் பெறுமா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னம்பலவீனம் அடைந்து விட்டமையையும், ,என்ற பொது நிலை வாதத்தில் வைத்து நல்ல ஆரோக்கியமான,பல நல்ல கருத்துக்கள் பாிமாறப்பட்டன.

சஞ்சீவி என்ற சஞ்சிகைக்கு புறம்பாக அதன் வளர்ச்சியில் அக்கறை கொண்ட சிலர் "சஞ்சீவி வாசகர் வட்டம்" ஒன்றுக்கான தேவையை முன்வைத்தனர்.அமைக்கப்படலாம்,அமைக்கப்படுவதற்கான தேவை சஞ்சீவிக்கு தற்போது உண்டா?என்கிற விவாதங்களும்,அவ்வாறான அமைப்புக்களை உருவாக்குவதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் பற்றி நிறையவும் கருத்துக்கள் வந்திருந்தது.

இவ்வாறாக நடைபெற்றுக்கொண்டிருந்த "வாசகர் கருத்துக்கள்"மத்தியில் ஆசிரியர் குழுவினர் தனித் தனியாக தமதுநிலைப்பாடுகள் பற்றியும் ,நடைமுறைச்சிக்கல்கள் பற்றியும் கருத்துத்தெரிவித்தனர்தானெனினும்,சஞ்சீவி என்ற பொதுநிலைப்பட்டு எடுக்கப்பட்ட விடையதானங்களில் எவ்வித நேரடியான பதிலையும் ஆசிரியர்குழு வழங்கவில்லை.ஆனாலும் கலந்துரையாடலின்பின் சகல கருத்துக்களும் அவர்களால் ஆராயப்பட்டு ஒரு பொதுநிலையான முடிவுகளை எதிர்வரும் சஞ்சீவிகளில் அறிவிப்பதாகவும், அறிவிக்கப்பட்டிருந்தது,ஆவலைத்தூண்டுவதுமல்லாமல்,ஆசிாியர்குழு தனது "உள்நிலை ஜனநாயகத்தை பேணும் பண்பினையும்" கருத்துக்களுக்கு அவர்கள் கொடுக்கும் மதிப்பினையும் உணரச்செய்தது.

முல்லையூரான் -

டென்மார்க்கிலிருந்து வெளிவரும்
இதழ்களிலிருந்து....

ARUMPU
AXELBORG-7B,2th
8700-HORSENS,DK.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விசாரணை

பனிகொட்ட
வெள்ளையாய் இரவு

கொடுமைக் குளிர்காற்று
ஊரின் கோடையை நினைப்பூட்ட
விடியாமல் இரவு நீளும்
நாளை காலையில் விசாரணை
அகதியின் கதை கேட்பார்கள்

பசி தீர்க்க வந்தவர்கள்
பகை ஆறிய கதை சொல்வேன்

கண் வழியே உயிர் பிரிய
பலபேர் பார்த்திருந்தார்.
பாலன் திலீபன் நிமிர்ந்திருந்தான்
பத்திரிகை குறிப்புண்டு.

கடலையும் கோயிலையும் தவிர
வேறொன்றுமறியா
பக்கத்துவீட்டு செபமாலை அப்பு
அமைதிக்கு தடங்கலாகி
மூன்று நாட்களுக்குப் பின்தான்
உடல் கிடைத்ததாம்
அம்மாவின் கடிதம் தலைமாட்டில்.

கண்ணயர்ந்த ஒருகணம்
இருந்த கச்சையையும் அவிட்டுவிட்டு
காந்தி தாத்தா வடலியடைப்பில்
நடந்து வரக் கனவு கண்டேன்.

நாளை காலையில் விசாரணை
நாள்தோறும் வாதிக்கப்பட்டு
காலைகள் தோறும் தண்டிக்கப் படுகின்றேன்.

சஞ்சீவி

www.tamilarangam.net

உடல் சுமந்து மனம் சலிக்கும்
இருந்தாலும்
யுத்தமே என்னை வாழச்சொல்லுது.
சீவித்திட காரியங்கள் உண்டு
இருக்கப்போகின்றேன்,
நாளை காலையில் விசாரணை.

09/04/1988




செல்வத்தின் "கட்டிடக்காட்டுக்குள்" என்னும் கவிதைத்தொகுப்பிலிருந்து >விசாரணை< என்ற கவிதையினை இங்கு தருகின்றோம். தொகுப்பிலுள்ள செல்வத்தின் மற்றய கவிதைகளையும் படிக்கவிரும்புவோர், சஞ்சீவியின் முகவரியுடனோ அல்லது "ஆசியா"

**ALLEE PANL LEAUTAUD**
**95200SARCELLES**
**FRANCE.**

என்ற முகவாியுடனோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

சஞ்சீவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## படித்ததும் கேட்டதும்

### துட்டகைமுனுவுக்கு 500 புத்தபிக்குகள்:

மல்வத்த மடாதிபதி வண.ரம்புக் வெல்ல ஸ்ரீ விபஸ்ஸி மாஹாநாயக்க தேரரும் தலதாமாளிகையின் தலைவர் திரு.நிரஞ்சன் விஜயரத்தினாவும்(முன்னாள் அமைச்சர் நிஸ்ஸங்கவிஜயரத்னவின் மகன்) புத்தபிக்குமார் சகிதம் யாழ்ப்பாணத்திற்குச் சென்றது கடந்தகால பரபரப்பான செய்திகளில் ஒன்று.இதுவே தென்னிலங்கையிலிருந்து வடக்கே வருகை தந்த பௌத்த முக்கியஸ்த்தர்களின் முதலாவது விடயம் என்றும் கருதப்படுகிறது.இவர்கள் தமிழ்மக்களின் அமைதிக்காகவோ/சமாதானத்திற்காகவோ சென்றிருந்தால் புத்தரின் போதனைகள் உயிர்வாழ்ந்திருக்கும்.

ஆனால் இவர்கள் வடக்கில் இராணுவத்தின் பிடியிலுள்ள தீவுப்பகுதிக்கும்,பலாலிக்கும் போன மடாதிபதிகள், இராணுவத்தினர் வெற்றிபெற ஆசிவழங்கினராம்.துட்டகைமுனுவும் இவ்வாறு தனது எல்லாளனுடனான யுத்தத்தின் படைஅணுவகுப்பின்முன்பு 500 புத்தபிக்குகள் முன்சென்றனராம்.இந்த பிக்குகளின் நடவடிக்கைகள் எதைக்காட்டுகின்றன.......சிங்கள பௌத்த பேரின வாதத்தையேயன்றி வேறெதனை!

www.tamilarangam.net

# எமக்கேது பௌர்ணமி

"வேலணையூர் பொன்னண்ணா" டென்மார்க்.

தமிழ்,இனம் காக்க வந்தவர்கள் எல்லோரும்
தங்கள் சுயநலம் காக்க எண்ணி
போட்டி,பொறாமை,பதவி என்னும்
சாக்கடையில் விழுந்து விட்டால்
தமிழர்க்கேது பௌர்ணமி
என்றுமே தமிழர்க்கு அமாவாசை!

அன்று முதல் இன்று வரை-இனங்காக்க
அடுத்தடுத்து வந்தவர்கள்
தங்களுக்குள் ஒற்றுமையை
தான் வளர்க்கத் தவறியதால்
தமிழர்க்கில்லை பௌர்ணமி
என்றுமே அவர்கட்கு அமாவாசை!

நாளைய சமுகம் நமக்குண்டு என்று
நேற்றைய சமுகம் நினைக்காத காரணத்தால்
இன்றைய சமுகம் இடர்பட்டுத் துடிக்கிறது
இதற்கோர் விடிவை எவர் தருவார்?-இதனால்
தமிழர்க்கில்லை பௌர்ணமி
என்றுமே அவர்கட்டு அமாவாசை!

சஞ்சீவி

www.tamilarangam.net

# புலம் பெயர்ந்தோர் இலக்கியம் - பார்வையும் பதிவும்:

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள தமிழர்கள் அது தொடர்பான சட்டங்களைத் தொிந்துகொள்ளவும் வதந்திகளை நம்பிக்கொண்டிருந்தவர்கள் உண்மைச் செய்தியை தொிந்துகொள்ளவும் ,கூடவே செய்திகள் மட்டுமன்றி பயனுள்ள தகவல்களை அளிக்கும் நோக்குடனும் 88 ஜனவாியில் ஆரம்பமான தூண்டில் இதுவரை 48 இதழ்களைத் தந்துள்ளது.இன்று இது தமிழ்மக்களது அரசியல் அக்கறையும் முனனெடுப்பும் உள்ளவர்களிடையே முக்கியத்துவம் பெற்ற சஞ்சிகையாக மாறியுள்ளது.

இந்தமாற்றம், வளர்ச்சி திடீரென நிகழ்ந்த ஒன்றென்று கூறிவிடுதல் இயலாது.தூண்டில் ஆரம்ப இதழ்களில் அதன் அரசியல் அக்கறை வெளிப்பட்டாலும் (உதாரணமாக ஒப்பந்தங்களும் ஒப்பாாிகளும்,இந்திய ஆக்கிரமிப்பும் எமது போராட்டமும்,மனிதன் எங்கே?போன்ற ஆசிாியத்தலையங்கங்கள் பிரஜைகள் எழுதவாரம்பித்த தேசத்தின் குறிப்புகளுடன்தான் இம்மாற்றம் துல்லியமாகத் வெளிப்படத்தொடங்கியது.

சஞ்சீவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கைபற்றிய உண்மைச் செய்திகளையும் அதன் பின்னணிகளையும் ஐரோப்பியவாசகர்களுக்குக் கொடுக்கு முகமாக24 வது இதழ்ள்எழுதவாரம்பிக்கப்பட்ட "இன்றைய நிலைமைகள் என்கிற பத்திநான் பின்னைய தூண்டில்களில் விரிந்து தேசத்தின் குறிப்புகளானது என எண்ணுகிறேன்.

நான் ஏன் பிரஜைகள் குறிப்புடன் தான் இந்த மாற்றம் ஏற்பட்டது எனக்கூறுகின்றேன் என்றால் ஆரம்பகால தூண்டில்களில் வெளியான ஒரு ஜனரஞ்சக சஞ்சிகை எப்போது வேண்டுமானாலும் எத்தனைமுறையும் பிரசுரிக்கக் கூடிய விடையங்களான உங்களுக்குத் தெரியுமா? புகை பிடிப்பதை நிறுத்துவது எப்படி? என்பன போன்ற விடையங்கள் ஒதுக்கப்பட்டு நூறு பூக்கள், பகுதியும் விவாதங்களும், இவை தொடர்பான வாசகர்களின் கடிதங்களும் வெளிவர ஆரம்பித்தது பிரஜைகள் எழுதவாரம்பித்த பின்னர்தான் என்பது எனது அபிப்பிராயம். இந்த தேசத்தின் குறிப்புக்களை குறித்தகால அரசியற் சூழலின் குறிப்பான நிலைமைகள் தொடர்பான தனது அபிப் பிராயங் களை முன் வைக் கிறது. அவை தொடர்பான மாற்றுஅபிப்பிராயங்களையும், விவாதங்களையும் கோருகிறது.

சஞ்சீவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வகையில் தேசத்தின் குறிப்புகளில் பிரஜைகள் இதுகால வரை தந்தவற்றை சாரப்படுத்தினால்

1.இந்தியப்படையின் வருகையுடன் மீளவும் ஒருமுறை தேக்கத்திற்குள்ளான தமிழ்மக்களது போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும்.

2. இன்று போராட்டத்திற்குத் தலைமையேற்கும்,புலிகளது ஜனநாயக மறுப்பும்,அவர்கள் கொண்டுள்ள பாசிசக் கூறுகளும் அரசியல் வழி முறைகளுக்கு ஒருபோதும் விடுதலையைப் பெற்றுத்தரப்போவதில்லை.

3.இதற்கு மாறாக புலிகளுக்கெதிராக என்று கங்கணம் கட்டிக்கொண்டு இந்திய,இலங்கை அரசுகளுடன் கை கோர்த்து நிற்கும் எந்தத் தமிழ் அமைப்புகளாலும் எதுவும் ஆகப்போவதில்லை,தமிழ் மக்களது விடுதலைப் போர் ஒழித்துக்கட்டப்படுவதை தவிர.

4.ஆகவே அரசும்,அரசு சார்ந்துள்ள தமிழ் அமைப்புக்களாலோ அல்லது புலிகளாலோ ஒருபோதும் தமிழ்மக்களது பிரச்சினைக்கான தீர்வின்றைப் பெற்றுத்தந்துவிட முடியாது.எனவே இவ்விரண்டும் தவிர்ந்த மூன்றாவது பாதை ஒன்று அவசியம்.அதை இது தொடர்பாய் அக்கறையுள்ள எல்லோரும் சேர்ந்து உருவாக்க வேண்டும்.அதற்கான விவாதங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

களை.அபிப்பிராயங் களை பலரும் முன்வைக்கவேணடும். என்று கேட்டுக்கொண்டே பிரஜைகள் தமது அபிப்பிராயங் களை முன் வைக்கிறார். இவ்வாறு பிரஜைகள் முன்வைத்த அபிப்பிராயங்களி ல் பலத்த சர்ச்சைக்குள்ளானது புலிகள் பற்றிய பிரஜைகளின் மதிப்பீடுகள்.

இது தவிர நூறுபூக்கள் பகுதியில் புலிகளது யுத்தம் தடுப்பு யுத்த மா? அழிவு அரசியலின் விபரீத விளைவா? ஐக்கிய முன்னணிப் ற்றி,ஐக்கியஇலங்கைக்கான போ ராட்டம் பற்றிய விவாதங்கள் இட ம்பெற்றன.

கூடவே இன்னொன்றையும் குறிப்பிடவேண்டும்.என்னவெனில் ராஜீவ்காந்திகொலைதொடர்பான வாதங்களும் இரண்டோ மூன்று தாண்டில்வரை இழுபட்டிருந்தது என்பதையும.இவ்விவாதத்தில் பிரஜைகள் முன்வைத்த கருத்துக்களையும் அவை தொடர்பாய்எழுந்தமாற்றுஅபிப்பிரா யங்கள் பற்றியும் அடுத்த இதழில்பார்ப்போம்.

நன்றி:சரிநிகர்.



சஞ்சீவி

www.tamilarangam.net

## குறுக்கெழுத்துப்போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 | 3 | | 5 | 6 | 7 | 8 ம் |
| 9 | 10 | 11 | 12 ன் | | | 15 | 16 |
| 17 | 18 | 19 ம் | | 21 | 22 | | 24 |
| | 26 | 27 | 28 | 29 வி | 30 | 31 | |
| 33 | 34 | | 36 | 37 | 38 ர | 39 | 40 |
| 41 டை | | | 44 | 45 | 46 | | 48 |
| 49 | 50 | | 52 | 53 | 54 | 55 | |
| 57 | 58 | 59 கை | | 61 | 62 | 63 | 64 |

இல
17

உங்கள் பாவனைக்கு:-

அலுவலகப்பாவனைக்கு:-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

c:20,No:17

afs.

சஞ்சீவி

www.tamilarangam.net

# சஞ்சீவி

## ஆறு மலர்களுக்கான சந்தா

| | |
|---|---|
| Switzerland | |
| France | |
| Italy | 25 u$ |
| London | |
| Germany | |
| Canada | |
| Australia | 29 u$ |
| Sweden | 125kr. |
| Norway | |
| Danmark | |

காசோலை எடுக்கவேண்டிய கணக்கிலக்கமும், முகவரியும்.

**A/C.NO.7601-408695-3**
**Tamilsk Dansk Venskabs Forening**
**Vestjysk Bank**
**7500-Holstebro,**
**Danmark.**

காசோலை அனுப்பவேண்டிய முகவரி

**CHANCHIVE**
**POSTBOX-1205,**
**7500-HOLSTEBRO,**
**DANMARK.**

"மறுக்கப்பட்டு,பழக்கமற்றுப்போனதொரு சுதந்திரமான
கருத்துப்பரிமாற்றலை உருவாக்குவதற்கு
எல்லோரது கருத்துக்களும்,
விமர்சனங்களுமே
வழிவகுக்கும்."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Chanchive
Postbox 1205
7500 Holsterbro
Denmark.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்